கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
22-7-1973
30 காசு



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.

PHL 6006 (x)



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.
தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.


அரைப்பங்கு செலவில் இருபங்கு ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS




சந்தா விவரம் :
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
நிர்வாகி, கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டைப்படக் குழந்தைப் பொம்மை.

திக்குத் தெரியாத காட்டில்
எங்களுக்கு நீங்களாவது
வழி காட்டுங்களேன் —

கோகுலம்
மலர் 2 : இதழ் 8
ஜூலை 22, 1973
பிரமாதீச, ஆடி 7



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

வண்ணப்படம் : எம். எஸ். சுந்தரராஜன்



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

சிசுபாலன் தன் பரிவாரங்களுடன் வந்து குண்டினபுரத்தைச் சேர்ந்தான். உருக்குமணி தனக்கே என்று பகல் கனவு கண்டு கொண்டிருந்தான். மகனுடைய வார்த்தையை மீறமாட்டாத பீஷ்மகன் சிசுபாலனுக்கே தன் அருந்தவப் புதல்வியைத் தரக் கருதிச் சிசுபாலனை வரவேற்றுச் சிறந்த உபசாரம் புரிந்தான்.

வீதிகளில் பன்னீர் தெளித்துச் சந்தனத்தால் மெழுகி நறுமலர்கள் தூவி, வழிநெடுகிலும் பூமாலைகளைத் தொங்க விட்டு வாழைக் கமுகுகள் நாட்டினார்கள். அந்தணர்கள் வேத ஒலி முழக்கினார்கள். நகரத்து மாந்தர்கள் தங்களை நன்கு அலங்கரித்துக் கொண்டார்கள். மகிழ்ச்சிக் கடலில் நீந்தினார்கள். எங்கும் ஆடலும் பாடலும் நிறைந்தன.

பகைவனும் பகைவனும் ஒன்றுபடுவது இயற்கை. ஆதலால் சிசுபாலன் அங்கு வந்த ஜராசந்தனை வரவேற்று உபசரித்தான்.

பல மன்னர்கள் குண்டினபுரத்தில் சேர்ந்திருப்பதால் தனியே சென்ற தம்பிக்கு ஆபத்து வரும் என்று எண்ணிய பலராமர் சேனைகள் புடைசூழக் குண்டினபுரத்துக்கு வந்தார்.

உருக்குமணி தேவி தனிமையில் சிந்திக்கலானாள். ''ஓலை கொண்டுபோன வேதியர் துவாரகை சேர்ந்திருப்பாரோ? வழியில் ஏதாவது இடர் நேர்ந்ததோ? ஓலையை நீலமேக வண்ணரிடம் தந்தாரோ ? எம்பெருமான் இப்படிக் கடிதம் எழுதிய இவள் தமக்குத் தகுதியானவளா என்று எண்ணி நம்மை வெறுத்துச் சும்மா இருந்து விடுவாரோ? போன வேதியர் திரும்பி வரவில்லையே? என்ன ஆயிற்றோ? முகூர்த்த நேரம் நெருங்கி விட்டதே? என் எண்ணம் நிறைவேறாமல் போய் விடுமோ ? கண்ணபிரான் எனக்குக் கிடைக்காமல் போய் விடுவாரோ?'' என்றெல்லாம் பலப்பல சிந்தனைகளுக்கு உள்ளானாள். அப்போது இடக் கண்ணும் இடத்தோளும் துடித்தன. அப்போது அந்தணர் விரைந்து வந்து உருக்குமணிக்கு ஆசி கூறி வாசுதேவருடைய வரவைத் தெரிவித்தார்.

உருக்குமணி ஆனந்தக் கண்ணீர்
வடித்து அந்தணரை அநேக முறைகள்
அஞ்சலி செய்தாள். என்ன கைம்மாறு
செய்வது என்று அறியாது திகைத்தாள்.


பீஷ்மகனுடைய அனுமதி பெற்று உருக்குமணி கௌரியின் திருக்கோயிலுக்குப் புறப்பட்டாள். பணிப் பெண்கள் நட்சத்திரக் கூட்டம் போல் சூழ்ந்து சென்றார்கள். வாள் தாங்கிய வீரர்கள் பலர் புடைசூழ்ந்து காவல் புரிந்தார்கள்.

இருண்ட மேகம் போன்ற கூந்தலும், அஷ்டமி திதிச் சந்திரனைப் போன்ற நெற்றியும், நீலோற்பல மலர் போன்ற கண்களும், பவளம் போன்ற இதழும், ஆணிமுத்தென்ற பற்களும், கண்ணாடி போன்ற கன்னமும், எள் பூவை போன்ற நாசியும், வலம்புரிச் சங்கு போன்ற கழுத்தும், இளநீர் போன்ற தனபாரங்களும், தாமரைமலர் போன்ற பாதமும், கருணை நிறைந்த குளிர்ந்த பார்வையும், தங்கக் கொடி போன்ற இடையும், அன்னம் போன்ற நடையும் உடைய உருக்குமணியைக் கண்ட அரசிளங்குமாரர்கள் மயங்கித் தங்கள் வாகனங்களில் இருந்து நிலத்தில் வீழ்ந்தார்கள்; ஆசைக் கடலில் ஆழ்ந்தார்கள்.

சங்கம், பேரி, மத்தளம், நாகசுரம், வீணை முதலிய வாத்தியங்கள் முழங்கின.

உருக்குமணி தேவி அம்பிகையின் ஆலயம் போய், அம்பிகைக்கு அபிஷேக ஆராதனைகள் உள்ளம் உருகிச் செய்தாள். கண்ணபிரானைத் தனக்கு நாயகனாகத் தருமாறு தேவியைப் பிரார்த்தித்தாள். அம்பிகைக்கு அணிந்த மாலையைக் கரத்தில் ஏந்தித் திரும்பி நின்ற அப்பெண்மணி, கண்மணியான கண்ணபிரான் எங்கே என்று கண் மலர நாலு திசைகளும் நோக்கினாள்.

சமய சஞ்சீவி போல் அத் தருணத்தில் கண்ணபிரான் அவள் திருமுன் காட்சி அளித்தார். உருக்குமணி கண்ணாரக்



கண்ணனைக் கண்டு கண்ணுங் கருத்தும் குளிர்ந்தாள். மாலையை மணிவண்ணன் கழுத்தில் தரித்தாள். அரிமுகுந்தன் அவள் கரமலரைப் பற்றித் தம் தேர் மீது ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

இதனைக் கண்ட அரசர்கள், 'ஆ! ஆ!' என்று கதறி ஆரவாரம் செய்தார்கள். சிலர் மகிழ்ந்தார்கள். சிலர் வெகுண்டார்கள். சிலர் திடுக்கிட்டு நின்றார்கள்.

சிசுபாலன் ஜராசந்தன் முதலியோர் இந்தச் செய்தியை அறிந்து ஒன்றும் செய்யத் தோன்றாமல் இஞ்சி தின்ற வானரங்களைப் போல் வாயடங்கி நின்றார்கள்.

உருக்குமி என்பவன், ஓரக்குரோணி சேனையுடன் புறப்பட்டு வீராவேசத்துடன் கண்ணபிரானைத் தொடர்ந்து எதிர்த்து நின்றான்.

மணிவண்ணர் அவனுடைய சேனைகளை மாய்த்து, அவனுடைய தேரையும் வில்லையும் ஒடித்துத் தமது வாளினால் தலையைத் துணிக்க ஓங்கினார்.

உருக்குமணி எம்பெருமானை இறைஞ்சி இவனைக் கொல்ல வேண்டாம் என்று வேண்டிக் கொண்டாள். கண்ணன் வாளினால் அவனுடைய தலைமயிரை வழித்து மொட்டையாக்கித் தம் தேர்க் காலில் கட்டி வெற்றிச் சங்கத்தை ஊதினார். பலராமர் அங்கு வந்து இந்த அலங்கோலத்தைக் கண்டு சிறிது சீற்றம் கொண்டார்.

''கிருஷ்ணா! உனக்கு எப்போதும் விளையாட்டுப் புத்திதானா? இவன் நமது மைத்துனன். நாம் இவனுக்கு மரியாதை செய்ய வேண்டாம். இவனை மொட்டை அடித்து அவமானம் செய்யலாமா?'' என்று கூறினார்.


உருக்குமணியைப் பார்த்து, ''அம்மா! இதற்காக நீ கோபித்துக் கொள்ளாதே. பொறுத்தருள்'' என்றார்.

கண்ணபிரான் உருக்குமியைக் கட்டவிழ்த்துவிட்டார். அவன் தன் ஊருக்குப் போகாமல் அவமானத்துடன் போஜன கூடம் என்ற ஒரு நகரை உண்டாக்கிக் கொண்டு தங்கினான்.

கண்ணபிரான் உருக்குமணியுடனும் ஏனைய பரிவாரங்களுடனும் துவாரகாபுரியை அடைந்தார். வசுதேவரையும் தேவகியையும் வணங்கினார். உருக்குமணி மாமி மாமன் என்ற இருவரையும் வணங்கினாள். திருமகளே மருமகளாக வந்திருக்கிறாள் என்று அறிந்து எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

கற்காச்சாரியரைக் கொண்டு உருக்குமணிக்கும் கிருஷ்ணருக்கும் திருமணம் நடைபெற்றது. ஏழு நாட்கள் திருமண விழா நடைபெற்றது. பல தான தருமங்கள் செய்தார்கள். இன்னிசை முழங்கியது. உருக்குமணி கண்ணனுடன் இன்புற்று வாழ்ந்தாள்.

மங்களம்





அநாதைகள் உருவாக்கிய அற்புத நகரம்

— விகேயெம் —

நன்றாக வளர்ந்த பெண் ஓநாய் அது. டைபர் நதியில் நீந்திக் கொண்டு வந்த அது ஏதோ சத்தம் கேட்டுத் தனது மூக்கை நீருக்கு மேலே உயர்த்தி உற்றுக் கேட்டது. வெள்ளம் வடிந்த ஆற்றுப் படுகையின் சேற்றுப் பகுதியிலிருந்து தான் அந்த ஓசை வருகிறது என்பதை ஓநாய் ஊகித்துக் கொண்டு விட்டது. மனிதக் குழந்தைகளின் அழுகுரல் அல்லவா?

பெண் ஓநாய் நதியிலிருந்து கரை ஏறியது. சத்தம் வந்த திசை நோக்கி நடந்தது. அங்கே பச்சிளங்குழந்தைகள் இரண்டு, பிறந்து சில நாட்களே ஆகியிருக்கும் இரட்டையர்கள், வெள்ளம் வடிந்த சகதிப் படுகையில் காலையும் கையையும் உதைத்து அழுதுகொண்டிருந்தன. பெண் ஓநாய் குழந்தைகளின் அருகே சென்றது, தனது பெரிய வாயை அகலத் திறந்து கொண்டு!

இவ்வளவையும் ஒரு புதர் மறைவில் மறைந்து நின்றபடி கவனித்துக்கொண்டிருந்தது ஓர் உருவம் அவன் ஓர் ஆட்டிடையன். ஃபாஸ்டுலஸ் என்பது அவன் பெயர். "ஓநாய் குழந்தைகளின் மேலாக நின்று கொண்டிருக்கிறது" என்று கிசுகிசுத்தான் ஆட்டிடையன், தன் அருகில் இருந்த மனைவியிடம். "சொன்னால் நீ நம்ப மாட்டாய். குழந்தைகள் ஓநாயின் வயிற்றுக்குக் கீழே சிரித்தபடி விளையாடிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தாய் ஓநாய் குழந்தைகளை வாஞ்சையோடு நக்கிக் கொடுக்கிறது."

ஆட்டிடையனின் மனைவி லாரன்ஷியா தன் கணவன் ஆற்றில் மிதந்து வரும் துணி மூட்டையைக் கைப்பற்றிக் கரை சேர்த்தபோது அதற்குள் இரண்டு பச்சிளங் குழந்தைகள் இருக்குமென்று நினைக்கவே யில்லை. அக்குழந்தைகளுக்கு ஓநாய் பால் கொடுத்துப் பசியாற்றி வளர்க்கும் என்பதையும் கூட அவள் கனவிலும் கருதியிருக்க மாட்டாள்.

ஆட்டிடையன் ஃபாஸ்டுலஸுக்கு, அந்தக் குழந்தைகள் யாருடையவை என்ற பூர்வோத்தரம் தெரியும். ஆனால் அதைத் தன் மனைவியிடம் வெளியிட விரும்பவில்லை அவன். அவ்விரு பிஞ்சுகளும் லத்தீன் பேரரசின் வாரிசுகள். அயனஸ் வம்சத்து வழித்தோன்றல்கள். லத்தீன் சிங்காதனத்திலிருந்து நுமிடார் மன்னனை அவன் தம்பி அமிலியஸ் வெளியேற்றித் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். கர்ப்பிணியாக இருந்த மன்னர் நுமிடாரின் மகளைச் சிறையில் தள்ளினான். சிறையிலே அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இரண்டும் ஆண் குழந்தைகள். அமிலியஸ் தொட்டிலிலிருந்து குழந்தைகளைப் பறித்து ஆற்றில் வீசும்படி ஆணை பிறப்பித்தான். ஆற்றில் மிதந்துவந்த துணி மூட்டையான அந்தக் குழந்தைகளை ஆட்டிடையன் கண்டு கரை சேர்த்தான். அந்தக் குழந்தைகளுக்குத் தான் ஓநாய் இப்போது தன் பாலை ஊட்டிப் பசியைத் தணித்துக்கொண்டிருக்கிறது.

ஓநாய்த் தாயின் பாலைப் பருகி வளர்ந்ததினால்தானோ என்னவோ, ஒப்பற்ற பலமும் தைரியமும் மிக்கவர்களாக விளங்கினார்கள் அவ்விருவரும். **ரோமுலஸ், ரேமஸ்** என்பது அக்குழந்தைகளின் பெயர். வளர்ந்து வாலிபர்களானபோது அவர்களது அஞ்சா நெஞ்சத்தையும் ஆற்றலையும் நாடே கண்டு வியந்தது.

மன்னன் அமிலியஸின் ஆணையில் நாட்டில் கொள்ளைக் கூட்டத்தினர்

மலிந்திருந்தார்கள். மன்னனே அவர்களை வளர்த்து வந்தான். துணிவோடு அக்கொள்ளையர்களை எதிர்த்துப் போராடினார்கள், இந்த அநாதை வாலிபர்கள். ஒரு சமயம் அவர்களோடு ஏற்பட்ட மோதலில் ரோமுலஸும் ரேமஸும் அவர்களிடம் சிக்கிக்கொண்டார்கள். ஆனாலும் ரோமுலஸ் தப்பி ஓடிவிட்டான். தம்பி ரேமஸ் கைதியாகி மன்னன் முன் கொண்டு போய் நிறுத்தப்பட்டான்.

அநாதைகளாக வாழ்ந்து வரும் அரச குமாரர்களுக்கு நேர்ந்த கதியைக் கேள்விப்பட்ட ஆட்டிடையனான ஃபாஸ்டுலஸ் அவர்கள் யார் என்ற உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய தருணம் வந்து விட்டதென்பதை உணர்ந்து செயல்பட்டான். நாட்டு மக்களை மன்னன் அமிலியஸுக்கு எதிராகத் திரட்டினான். அதே சமயம் தப்பிச் சென்ற ரோமுலஸ் தன் தோழர்களுடன் திடீரென்று அரண்மனைக்குள் புகுந்து தம்பி ரேமஸை விடுவித்து, அரசை அபகரித்துக் கொண்ட அக்கிரமக்கார மன்னனையும் கொன்றான். வெற்றி முழக்கத்தோடு சகோதரர்கள் தங்கள் தாத்தாவான நுமிடாரை மறுபடியும் அரியணையில் ஏற்றினார்கள்.

ரோமுலஸ், ரேமஸ் சகோதரர்களின் நண்பர்களான இளைஞர் கூட்டத்துக்குத் தங்கி இருக்க இடம் இல்லை. நாளுக்கு நாள் பெருகி வந்த அந்த வீரர்களுக்கு அந்தச் சிறு கிராமம் போதுமானதாக இல்லை. ஆகவே புதிய நகரை நிர்மாணிக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தனர் ரோமுலஸும் ரேமஸும். [illegible] அருகே ஏழு குன்றுகள் [illegible] நிலப் பகுதியை நகர நிர்மாணத்துக்குத் தேர்ந்தெடுத்தார்கள். [illegible] நாட்களாக ஒற்றுமையாக இருந்த சகோதரர்கள் இப்போது சண்டையிட்டுக் கொள்ளலாயினர். வாக்குவாதம் முற்றியது. சகோதரர்களின் தோழர்களும் இரு கட்சிகளாகப் பிரிந்து கொண்டார்கள். சண்டை எதற்காக? புதிய நகர நிர்மாணத்தில் சகோதரர்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை.

ரோமுலஸ் தன் தம்பியை உதறிவிட்டு நிலத்தை அளந்து குறியிட்டான். "இங்கு நகரின் பிரதான மதில் சுவரை எழுப்புவேன். அதன் பிரதான வாசலை இந்தப் பக்கம் அமைப்பேன்" என்று பூமியில் கோடுகள் போட்டுக் கொண்டிருந்தான் ரோமுலஸ். ரேமஸுக்கு அண்ணனின் அலட்சியம் தாங்க முடியாததாக இருந்தது. அவன் மணலில் திட்டமிட்டுத் தீட்டும் குறிப்புகளைக் கண்டு கோபத்துடன் "இதையா நீ கோட்டைச் சுவர் என்கிறாய்? இதனால் எதையும் காக்க முடியாது" என்றான்.

"காக்க முடியாதா? பார்ப்போம்" என்று அலட்சியமாகச் சிரித்தான் ரோமுலஸ்.

"உன் மதிள் சுவரின் யோக்கியதை எனக்குத் தெரியும்" என்று கூறிக் கொண்டே கோட்டைச் சுவருக்கான கோட்டைத் தாண்டிக் குதித்து அண்ணன் மீது பாய்ந்தான் ரேமஸ் ஆத்திரத்துடன். தன்னைக் காத்துக் கொள்ள ரோமுலஸ் போரிட்டான். இருவரும் சிறிது நேரம் கட்டிப் புரண்டார்கள். முடிவில் ரேமஸ் இறந்து விழுந்தான்.

புதிய நகரத்துக்கான ஆரம்பம் சுபமாக இல்லா விட்டாலும் அதன் எதிர்காலத்துக்கு நல்ல சகுனமாக அமைந்தது. ரோமுலஸ் உருவாக்கிய நகரம் தான் புகழ் பெற்ற **ரோமாபுரி**. பலாத்காரத்திலும், கோபம், முரட்டுத்தனம் ஆகியவைகளிலும் உருவான ரோம் நகரம் பின்னால் கொடுமைகளின் இருப்பிடமாகவே வளர்ந்து பிரபலமாகியது.

ரோமாபுரியைச் சுற்றி ரோமுலஸ் பலமான சுவர் எழுப்பினாலும் கூட, நகருக்கு வெளியே அதன் எல்லையில் வேறு ஒரு நகரமும் தோன்றலாயிற்று. ரேமஸின் ஆதரவாளர்களும் வீரர்களும், கொள்ளையர்களும், நாடோடி அடிமைகள் ஆகிய இத்தாலிய நாட்டின் கவலையற்ற முரடர்கள் அத்தனை



பேரும் இப்புதிய நகரங்களில் வந்து மொய்த்துக் கொண்டார்கள்.

கௌரவமுள்ள லத்தீன் மக்கள் கொடுமைகள் நிறைந்த இந்தப் புதியவர்களை விரும்பவில்லை. பழைய நகரத்தைச் சார்ந்த குடியானவர்களும் இப்புதிய ரோமானியர்களை வெறுத்தார்கள்.

''இந்தக் கொள்ளையர்களுக்கும் வெறியர்களுக்கும் எங்களுடைய பெண்களை மனைவியாக்க நாங்கள் விரும்பவில்லை'' என்று வெறுப்பால் முகம் சுளித்தார்கள்.

அவர்களின் வெறுப்பை வளர விடாமல் செய்ய ஓர் உபாயம் காணவேண்டும் என்று எண்ணினான் ரோமுலஸ்.

''ஒரு விழா எடுப்போம். விருந்தும் வேடிக்கையும் விளையாட்டும் அதில் இடம் பெறும். எல்லா லத்தீன், ஸாபைன் மக்களையும் நமது புதிய நகரின் பெருமையைக் காண வரும்படி விருந்துக்கு அழைப்போம்'' என்றான் ரோமுலஸ்.

விழா, கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. விருந்தாளிகளாக லத்தீன் மக்களும் ஸாபைன்காரர்களும் புதிய நகரான ரோமாபுரியை அடுத்த சம வெளியில் குழுமி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று ரோமானிய வாலிபர்கள் விழாக் கூட்டத்தின் விருந்தாளிகளிடையே புகுந்தார்கள். இளம் பெண்களை இழுத்துக் கொண்டு மலைமீதுள்ள ரோமாபுரிக்கு விரைந்தார்கள். உடனே புதிய நகரின் பலமான கதவுகள் அடைக்கப்பட்டன. என்ன நடந்தது என்பதை அறிவதற்குள் தங்கள் பெண்களைப் பறிகொடுத்த லத்தீன் ஸாபைன் பெருமக்கள் ஆத்திரமும் அவமானமும் அடைந்து கொதித்தார்கள். ஆனால் ரோமானிய முரடர்களுடன் மோதுவதற்கான துணிவு இல்லை. ஆகவே பழி தீர்க்க வேண்டும் என்ற உறுதியோடு தங்கள் நாட்டுக்குத் திரும்பினார்கள்.

ரோமானியர்களுக்கு மனைவிகள் கிடைத்து விட்டார்கள். ஆனால் நிதானமாகச் செயல்படும் ஸாபைன் மக்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டார்கள். அவர்களின் மன்னன் டாடியஸுக்கு ரோமானியர்களைத் தாக்குவதற்கான படை பலம் பெற மூன்று ஆண்டுகள் ஆயிற்று. ரோமாபுரியை நோக்கி அப்படை புறப்பட்டபோது வெற்றி கொள்ள முடியாத அளவுக்கு அது பெருகியது.

ரோமாபுரியைக் காத்து நின்ற ரோமானியர்கள், ஸாபைன் படைகளின் முதல் தாக்குதலிலேயே சிதறி ஓடினார்கள். ஆனால் ரோமுலஸ் அவர்களை உற்சாகமூட்டி ஒன்று திரட்டி மறுபடியும் போரிடச் செய்தான். ஆனாலும் டாடியஸின் பெரும் படையைக் கண்ட ரோமுலஸுக்கே கலக்கமாகத்தானிருந்தது. அத்துடன் ஒப்பு நோக்கும்போது தனது படை மிக மிகச் சொற்பம் என்பதை அவனால் உணர முடிந்தது.

''நமக்கு விருந்து கொடுத்த சூழ்ச்சிக்காரனைப் பாருங்கள். ரோமானியர்களுக்கு நாம் இப்போது சரியான பாடம் கற்பிப்போம்'' என்று கூறியபடி தம் படைகளுக்கு உத்தரவிடத் தன் கையை உயர்த்தினான் டாடியஸ். ஏதாவது ஓர் அதிசயம் நிகழ்ந்தாலொழிய ரோமுலஸையும் அந்தப் புதிய நகரையும் காப்பாற்றுவதற்கு வேறு வழியேயில்லை.

அந்த அதிசயம் நிகழத்தான் செய்தது. புதிய நகரின் நெடிதுயர்ந்த கதவுகள் திறந்தன. ஸாபைன்களைப் போலவே ரோமுலஸும் வியப்பினால் விழி பிதுங்கப் பார்த்துக் கொண்டிருந்தான். ரோமாபுரியிலிருந்து, அப்புதிய நகரின் குன்றுகளிலிருந்து நீண்டதோர் ஊர்வலம் வெளியே வந்தது. ஊர்வலத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் பெண்கள். எல்லோரும் வெள்ளை ஆடை அணிந்திருந்தார்கள்.

ஊர்வலத்தை ஓர் ஸாபைன் அழகி முன்னின்று நடத்திக்கொண்டு வந்தாள். எதிர் எதிரே போரிடத் தயாராக நிற்கும் இரு பக்கத்துப் படை வீரர்களுக்கும் நடுவே அவர்கள் போய் நின்று கொண்டார்கள். ''நீங்கள் செய்ததெல்லாம் போதாதா? எங்கள் கணவன்மார்களும் எங்கள் குடும்பத்தினரும் ஒருவரை ஒருவர் கொன்று குவிப்பதையும் நாங்கள் காண வேண்டுமா?'' என்று ரோமுலஸையும் டாடியஸையும் நோக்கிக் கேட்டார்கள் அத்தனை பெண்களும்.

சில விநாடி அவ்விரு படைகளிடையே நிசப்தம் நிலவியது. அடுத்து விரோதிகளாய் எதிர் எதிராக நின்றவர்கள் ஓடி வந்து கட்டித் தழுவிக் கொண்டார்கள். ரோமுலஸும் டாடியஸும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஸாபைன் மக்கள் புதிய நகரத்து லத்தீன் மக்களுடன் தோழமையோடு கலந்தார்கள்.

டைபர் நதிக் கரையிலுள்ள நகரங்களுள் மிகப் பலம் பொருந்திய நகரமாக விளங்கியது ரோமாபுரி. இதனால்தான் ரோம் நகரில் பெண்களுக்கு இத்தாலி நாட்டில் வேறு எங்குமில்லாத மதிப்பும் மரியாதையும் சுதந்திரமும் அளிக்கப்பட்டன. அவர்களில்லாவிட்டால் அந்தப் புகழ்பெற்ற நகரம் அழிந்தல்லவா போயிருக்கும்!

பார்வதியும் ராஜியும்

கவிஞர் வி. துரைசாமி, எம்.ஏ.,



வீட்டுக் கணக்கினைச் செய்துகொண்டே — ராஜி
வீதி வேடிக்கையைப் பார்த்திருந்தாள்
பாட்டொன்று பாடிக்கொண்டேநுழைந்தாள்—மெல்லப்
பக்கத்து வீட்டுப்பெண் பார்வதியே.

பார்வதி ராஜியின் பள்ளித்தோழி — எல்லாப்
பாடத்தி லுமவள் 'பஸ்டு ராங்கு'
தேர்வினில் ராஜியும் பார்வதியை — மிஞ்சத்
தினமும் முயற்சிகள் செய்திடுவாள்

''வாடி விளையாட'' என்றழைத்தாள் — தோழி
ராஜியும் சம்மதித் தேயெழுந்தாள்
கூடி இருவரும் வாசலிலே — கையைக்
கோத்து நடக்கின்ற வேளையிலே

சாலையில் ஓர்பக்கம் தந்திக்கம்பம் — அதைச்
சார்ந்தே எதிரில்மின் சாரக்கம்பம்!
சால நிமிர்ந்தஅக் கம்பங்கள்தாம் — தம்முள்
சண்டை யிடல்போலப் பேசினவே

பார்வதி ராஜி இருவருமே — மிக்க
பரபரப் போடுஅதைக் கேட்டுநின்றார்
ஆர்வமுடன் கம்பம் பேசியதை — என்னால்
ஆனமட்டும் இங்கே சொல்லுகிறேன்

தந்திக் கம்பம் :

என்னைவிடச் சற்று உயர்ந்துவிட்டால் — உனக்கு
இத்தனை கர்வமும் வந்திடுமோ?
மின்னைச் சுமந்துகொண் டேதிரிவாய் — உன்றன்
மேனி தொடுபவர் மாய்ந்துபோவார் !

மின் கம்பம் :

இல்லத்திலே விளக் காகிடுவேன் — பல
எந்திர சாலை நடத்திடுவேன்
சொல்லைச் சுமந்துன்னைப் போல்திரியும் — சுத்த
சோம்பேறி நானல்ல கண்டிடுவாய் !

தந்திக் கம்பம் :

தூரத் தொலைவி லிருப்பவர்க்கே — சேதி
சொல்லித் திரியும்நான் சோம்பேறியா?
நேரத்தை மிச்சப் படுத்திடுவேன் — வாழ்வை
நித்தம் மகிழ்ச்சியா யாக்கிடுவேன்

மின் கம்பம் :

ஒவ்வொரு நாளும்நான் இல்லாவிட்டால் — மக்கள்
ஒன்றும் இல்லாதவ ராகிடுவார்
செவ்விய வாழ்வுக்கு நம்மிருவோர் — தொண்டு
சேர்ந்து செய்வோம் பகை நீங்கிடுவோம்

பார்வதி ராஜி இருவருமே — அந்தப்
பண்புள்ள பேச்சினைக் கேட்டு நின்றார்
ஆர்வமுடன் பூங் காவினுள்ளே — விளை
யாடித் திரும்பினர் மாலையிலே.

ஜிப்ஸம்


நீராலும் நெருப்பாலும் பாதிக்கப் படாத ஒரு பொருள் ஜிப்ஸம். இதனால் இதைக் கொண்டு சுவர்ப் பலகைகள், ஓடுகள், ஆகிய கட்டிடப் பொருள்களை உருவாக்குகிறார்கள்.

ஜிப்ஸம், கொஞ்சம் சிமெண்டு வேறு சில பொருள்கள் இவைகளைக் கலந்து கட்டிட வேலைகளுக்கான கனமற்ற ஒரு செயற்கைப் பொருளை உருவாக்கு கிறார்கள். இதற்கு ஸ்டாஃப் (Staff) என்று பெயர். தாற்காலிகக் குடியிருப் புக்களை இதனால் கட்டலாம்.

அது சரி, ஜிப்ஸம் என்றால் என்ன? இது ஒரு தாதுப் பொருள். பூமியி லிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. கால் ஷியம் சல்பேட்டும் தண்ணீரும் கலந்த ஒரு சேர்க்கை. ஒரு வகை ஜிப்ஸத்தில் ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியது. அதை ஸெலனைட் (Selenite) என்பார்கள். இன்னொரு விசேஷமான ஜிப்ஸம் பள பளப்பாக இருக்கும். இதை அலபாஸ்டர் (Alabaster) என்று கூறுவார்கள்.

பொதுவாக இந்த ஜிப்ஸம் தாதுவைச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப் பார்கள். சில இடங்களில் பூமியின் மேற் பரப்பிலேயே கிடைக்கும். வேறு இடங்களில் பூமியின் மிக ஆழத்தில் தான் கிடைக்கும். டெக்ஸாஸில் பல நூறு சதுர மைல்கள் பரப்பில் பலநூறு அடிகள் கனத்தில் கிடைக்கிறது.

புராதன எகிப்தியர் காலத்திலிருந்து ஜிப்ஸம் பூச்சுப் பொருளாகவும் கட்டிடச் சாதனங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஜிப்ஸத்தைத் தனியாகவும் மணல், சுண்ணாம்பு இவைகளுடன் கலந்த கலவையாகவும் வார்ப்பட வேலைகளுக்குப் (அச்சு) பயன்படுத்து கிறார்கள். நகாசு வேலை செய்யும் சுண் ணமாகவும், கூரை வேலைகளுக்கும் முடி வான அழகுப் பூச்சுக்கும் ஜிப்ஸம் உபயோகப்படுகிறது. நாடக அரங்குகள் சினிமா செட்டிங்குகள். ஆகியவை ஜிப் ஸத்தினால் ஆன பலகைகளினாலும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸாலுமே உரு வாக்கப்படுகின்றன. சிற்பிகள், 'அறுவைச் சிகிச்சையாளர்கள், பல் டாக்டர்கள், ஆகியோர் அச்சுக்கள் அமைப்பது ஜிப் ஸத்தினால்தான்.



உடலின் ஒரு பாதியும் மறு பாதியும்

காலணி வாங்கும்போது கவ
யுங்கள். கடைக்காரர் உங்கள் கால்க
அளக்கும்போது ஒரு காலுக்கு மறுகா
நீளத்தில் வித்தியாசப்படும். இரண்
கால்களும் ஒருங்கிணைந்துதானே செய
படுகின்றன. அப்படி இருக்க இந்த வி
தியாசம் ஏன்?

நமது உடலில் இந்தச் சிறு வித்
யாசம் காலில் மட்டுமல்ல, எல்லா
பாகங்களிலுமே உள்ளது. ஒரே அ
வான இரு பாகங்களைக் கொண்
அமைந்ததல்ல நமது உடல். அஸிமி
ரிகல் என்பார்கள் இதை. இடது க
வலது கண் என்று பெரியவர்கள் சொ
வதைக் கேட்டிருப்பாயே. அது இ
தான். உங்கள் முகத்தைக் கண்ண
யில் பார்த்துக் கொள்ளுங்கள். வல
பக்க முகம் இடது பக்க முகத்தைவி
நன்கு வளர்ந்து முதிர்ச்சி யடைந்திரு
பதைக் காணலாம். இதே முறை
தான் உடலின் மற்றப் பாகங்களுக்கும
பலத்திலோ, லாகவத்திலோ இரு கா
களும் ஒன்றுபோலிருப்பதில்லை. இ
தயம் உடலின் இடப் பக்கத்திலும
கல்லீரல் வலப்பக்கத்திலும் இரு
கின்றன. ஆகவே உடல் ஒரே சம நி
யில் இல்லை. பலன்? நமது எலும்புக் கூ
சமநிலைக்குச் சற்றே மாறுபட்ட வித
தில்தான் வளருகிறது.

உடல் அமைப்பின் இந்தச் சிறு மா
பாடு நாம் செய்யும் பல்வேறு காரிய
களுக்கு மகத்தான உதவியாக இரு
கிறது. புழுதிக் காற்று, ஒரே பு
அல்லது கண்களைக் கட்டிக் கொண்
நடக்கும்போது நீங்கள் நேராகப் போ
மாட்டீர்கள். உங்களை அறியாமலே
சுற்றிச் சுற்றி வட்ட வடிவமாக வ
வீர்கள். இந்த விநோத அமைப்
மனித உடலுக்கு மட்டுமல்ல. பிராண
களுக்கும்தான். சிலருக்கு இடது கை
பழக்கம் இருப்பதைப் பார்த்திரு
பீர்கள். இது உடலின் 'அஸிமிட்ரி'யின
அல்ல. மூளையின் 'அஸிமிட்ரி'யின
தான் இடது கைப்பழக்கம். மூளையி
இடது பாதி உடலின் வலது பாதியை
இயக்குவிக்கிறது. வலது பாதி மூ
இடது பாதி உடலை ஆதிக்கம் செலுத்து
கிறது. பொதுவாக இடது பாதி மூ
யின் சக்திதான் அதிகமாக இருக்கும
ஆகவேதான் நூற்றுக்குத் தொண்ணூ
று பேர் வலது கை வேலைக்காரர்களா
இருக்கிறோம். வலது பாதி மூளையி
ஆதிக்கம் ஓங்கினால் இடது கைப்பழக்க
ஏற்படுகிறது.

பால்

பாலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? 'பால் சுவையான ஒரு பானம்; அது ஒரு பூரணமான உணவுப் பொருள்' என்பீர்கள். ஆனால் அதை விளக்க முடியுமா உங்களால்? மனித உடலுக்கு, அவன் ஆரோக்கியமாக வாழ என்னென்ன தேவையோ அத்தனையும் பாலைக் குடித்தாலே கிடைத்து விடுகின்றன. அது எப்படி என்பதைப் பாருங்கள்.

தசைநார்களை வளர்க்கவும், உருவாக்கவும் புரோட்டீன்கள் தேவை. இது பாலில் இருக்கிறது. சக்தியைக் கொடுக்கும் பாலில் நிறையக் கொழுப்புச் சக்தி உள்ளது. வெண்ணெயாக இது பாலிலிருந்து கிடைக்கிறது. கார்போஹைட்ரேட் என்ற சக்தி சர்க்கரையிலிருந்து கிடைக்க வேண்டும். இந்தச் சர்க்கரைப் பொருளும் பாலில் உள்ளது. கரும்புச் சர்க்கரையைவிடப் பாலில் உள்ள சர்க்கரை இனிப்பில் குறைவு. ஆனால் மற்ற சர்க்கரைகளைவிடப் பாலில் உள்ள சர்க்கரையை உடல் சுலபமாக ஜீரணித்துக் கொள்ளுகிறது.

பாலில் உடலுக்குத் தேவையான தாதுப் பொருள்களும்கூடக் கிடைக்கின்றன. எலும்பை வளர்க்கும், ரத்தத்தைப் பெருக்கும் தாதுப் பொருள்கள் உடலுக்குத் தேவை. கால்ஷியமும் பாஸ்பரஸும் பாலில் நிறைய உள்ளன. மற்ற உணவு வகைகளில் இருப்பதை விடப் பாலில் கால்ஷியம் அதிகம்.

பாலில் உள்ள மற்றத் தாதுப் பொருள்கள் என்னென்ன தெரியுமா? இரும்பு, தாமிரம், மாங்கனீஸ், மக்னீஷியம், சோடியம், பொட்டாசியம், க்ளோரின், ஐயோடின், கோபால்ட், துத்தநாகம்... போதுமா? இன்னும் பாலின் மகத்துவம் பற்றிக் கேளுங்கள். பாலில் ஏராளமான வைட்டமின்களும் இருக்கின்றன. பி-2, ஏ, பி-1, சி, டி இத்தனை வைட்டமின்களும் இதில் உள்ளன. இதுமட்டுமா? பாலில் தண்ணீரும் இருக்கிறதே! (கோனார் ஊற்றும் குழாய் நீரைச் சொல்லவில்லை) ஒரு க்வார்ட் பாலில் திட உணவுப் பொருள் கால் பவுண்டு எடை உள்ளது என்பது ஆச்சரியமூட்டும் செய்தியில்லையா?



டான்ஸில் என்ன செய்கிறது?

நாக்குக்குப் பின்னால் தொண்டையின் இரு பக்கங்களிலும் இருக்கும் சதைகளைத்தான் நீங்கள் டான்ஸில் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள். இது தவறு.

பல ஜோடி டான்ஸில்கள் பல்வேறு உருவத்தில் இருக்கின்றன. டான்ஸில் என்பது தசைநார்களின் தொகுப்புக்களைக் கொண்ட சிறு சிறு முடிச்சுக்கள். இவைகளை 'லிம்பாய்டு' (Lymphoid) என்பார்கள். இவை தொண்டைக் குழியில் அமைந்திருப்பதால் இவைகளுக்கு விசேஷமான காரியம் உண்டு. மூக்கு, வாய் இவைகளின் வழியே உள்ளே புகும் தொத்து நோய்க் கிருமிகளை முதலில் சந்தித்து எதிர்த்துப் போராடும் கடமை இவைகளுக்குத்தான். வாயின் மேலண்ணத்தின் அருகே இருக்கும் மிகப் பெரிய இரு முடிச்சுக்களுக்கு 'பாலடைன் டான்ஸில்ஸ்' என்று பெயர். தொண்டையின் மேலே பின்புறமாகச் சிறு சிறு டான்ஸில்கள் உள்ளன. இவைகளுக்கு அடினாய்டு என்று பெயர். நாக்கின் மேலும் உணவுக் குழலின் ஆரம்பத்திலும் கூட சிறுசிறு டான்ஸில்கள் உள்ளன.

வாய்ப் பாகத்தை மூடியிருக்கும் மெல்லிய ஜவ்வுத் தோல்தான் டான்ஸில்களையும் மூடியிருக்கிறது. டான்ஸிலில் இந்த ஜவ்வுத் தோல்கள் மெல்லிய ஆழமான பைகளாக உருவாகியிருக்கும். இதற்கு 'க்ரிப்ட்ஸ்' (Crypts) என்று பெயர். வாய்க்கு வரும் கிருமிகள், கெடுதல் விளைவிக்கும் பொருள்களை இந்தக் க்ரிப்ட்ஸ்கள் சிறைப்பிடித்துக் கொண்டுவிடுகின்றன. ரத்த அணுக்கள் உடனே இவைகளைச் சூழ்ந்து கொண்டு கிருமிகளை அழிக்க உதவும். தொத்து நோய்க் கிருமிகளுடன் போராடுவது டான்ஸிலின் பொதுவான காரியம்.

சிலவேளைகளில் டான்ஸிலின் திசுக்களுக்குள் சிறைப்படும் கிருமிகளின் ஆதிக்கம் ஓங்குமானால் அப்போதுதான் டான்ஸில் முழுவதும் வீங்கிப் பெரிதாகின்றன. இந்த வீக்கத்துக்கு, 'டான்ஸிலைட்டிஸ்' என்று பெயர். பாலடைன் டான்ஸிலில் ஒன்றோ அல்லது இரண்டுமோ பெரிதாகிச் சிவப்பாகப் புண்ணாகிவிடும். க்ரிப்ட்ஸ் வீங்கிக் கொண்டு சில வேளைகளில் கெட்டியான சீழையும் வெளிப்படுத்தும். இது கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலை. இத் தொத்து நோய் திடீரென்று ஏற்பட்டு நாலைந்து தினங்கள்வரை நீடிக்கும்.

திம்மரசு திகைத்தார்!

ஆர். பாஸ்கர்

சபையின் அமைதியைக் குலைத்தது அந்த இளைஞனின் அபயக் குரல்.. குரல் வரும் திசையை நோக்கி எல்லோருடைய பார்வையும் சென்றது. காவலாளிகளின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு உள்ளே வர முயன்றான் அந்த வாலிபன். ? அவன் செய்கை எல்லோருக்கும் வியப்பை அளித்தது.

வாலிபனுக்கு வழிவிடும்படி வாயிற் காப்பாளர்களுக்கு அறிவித்தார் மன்னர். அவர்கள் தங்கள் பிடியைத் தளர்த்தினர்.

முயற்சியில் வெற்றி கண்ட வாலிபன் ஓடிச் சென்று மன்னரின் காலடியில் விழுந்து வணங்கினான். கூடியிருந்தவர்கள் விஷயத்தை அறிய ஆவலாய் இருந்தனர். மன்னரோ பொறுமை இழந்து விட்டார். மந்திரி அவனை விசாரிக்க முற்பட்டார்.

''நீ யார்? ராஜ சபைக்குள் இடமின்றி நுழைய வேண்டிய காரணம் என்ன?'' என்றார் மந்திரி.

''எனக்கு மந்திரி திம்மரசுவைப் பார்க்க வேண்டும்!'' என்றான் அவன்.


அடுத்த விநாடி எல்லோர் பார்வையும் மந்திரியின் பக்கம் செல்லவே திம்மரசு திகைத்துப் போனார். தம் பெயரைச் சொல்லிக் கொண்டு அநாதை போன்ற ஒரு வாலிபன் அலங்கோல உடையுடன் ராஜ சபைக்கு வரக் காரணம் என்னவாக இருக்கும் என்று அவரால் ஊகிக்கவே முடிய வில்லை. சிந்திக்க முயன்றார். ஆனால் அந்த இளைஞன் அவரைச் சிந்திக்க விடாமல் தன் கையிலிருந்த ஓர் ஓலையை அவரிடம் கொடுத்து விட்டு ஏக்கத்துடன் அவர் முகத்தைப் பார்த்தான்.

திம்மரசு அந்த ஓலையை வாங்கிக் கொண்டார். பிரித்துப் பார்த்தார். ''ஹா!'' என்று அவர் தம்மையும் மறந்தவராய்ச் சபையில் கூவிவிட்டார்.

மன்னர் மலைத்துப் போனார். ''அப்பாஜி! ஓலையில் என்ன விஷயம் எழுதப் பட்டிருக்கிறது?'' என்று அவர் திம்மரசுவைப் பார்த்துக் கேட்டார்.

திம்மரசு அவர் கேட்பதை ஒருகணம் பொருட்படுத்தவில்லை. அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்த வரிகளைப் படிப்பதில் தன்னையும் மறந்து ஆழ்ந்து விட்டார். **''....அந்த நிலைக்கு நான் வந்துவிட்டால் அப்போது எனக்குச் சொந்தமான ஆஸ்தியில் நான்கில் ஒரு பங்கு உமக்குத் தருகிறேன். வாக்கைக் காப்பாற்றுவேன் — திம்மரசு''** என்று அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்த நான்கு வரிகளைப் படிக்கவும் திம்மரசுவின் கண்களில் இருந்து நீர் வடிந்தது. அரசருக்கு அவர் செய்கை மேலும் கலவரத்தைக் கொடுக்கவே அவரை வற்புறுத்திக் கேட்டார்.

''மன்னவ! இது முற்றிலும் என் சொந்த விஷயம். சற்று அவகாசம் அளித்து, இந்த இளைஞனை என்னுடன் அழைத்துச் செல்ல அனுமதி கொடுக்க வேண்டும்!'' என்றார் திம்மரசு.



அரசர் சந்தர்ப்பத்தை அறிந்து அவருக்கு அனுமதி அளித்தார். சபையோர் திம்மரசுவையும், அவரைத் தொடர்ந்து செல்லும் அந்த அனாதை வாலிபனையும் வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திம்மரசு தம் இருப்பிடம் சேர்ந்ததும் இளைஞனை முறைப்படி வரவேற்றார். அவர் தன்னை இவ்வாறு உபசரிப்பார் என்று இளைஞன் கனவிலும் நினைக்கவில்லை. அவன் ஆச்சரியத்தில் மூழ்கி, பேச நாவெழாமல் தவித்தான்.

''உனக்கு இந்த ஓலை எவ்விதம் கிடைத்தது?'' — மிகுந்த வியப்புடன் கேட்டார் திம்மரசு.

வாலிபன் சற்றுத் தயங்கினான். திம்மரசு அவனை வற்புறுத்திக் கேட்கவே அவன் தனக்கு ஓலை கிடைத்த விதத்தைச் சொன்னான்.

''என்ன, உன் தகப்பனார் இறந்துவிட்டாரா? அவருக்கு நான் எழுதிக் கொடுத்த ஓலைதான் இது! வறுமையில் வாடும் உனக்கு இந்த ஓலை ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்து பெருஞ் செல்வத்தை அளிக்கப் போகிறது!'' என்று உவகையுடன் கூறினார் மதி மந்திரி. வாலிபன் தன் நிலையை மறந்தான். தன்பால் அதிர்ஷ்டச் சக்கரம் இவ்வளவு விரைவில் சுழலும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.


''உன் தந்தைக்கு நான் கொடுத்த வாக்கை இப்போது காப்பாற்றத் தயாராக இருக்கிறேன். உன் விருப்பப்படி நீ என் உடைமைகளில் நான்கில் ஒரு பங்கு பெற்றுச் செல்லலாம்!'' என்றார் அப்பாஜி.

''ஐயா! தாங்களாகப் பார்த்து என் வறுமையைப் போக்கும் அளவுக்குக் கொடுக்கும் செல்வத்தை மனத் திருப்தியுடன் நான் பெற்றுக் கொள்ளுகிறேன்!'' என்று பணிவாகப் பதில் கொடுத்தான் இளைஞன்.

''இல்லை! உன் தந்தையின் வார்த்தையில் நம்பிக்கை வைக்காத நான் அவர் வாக்குப் பலித்தால் அவர் கேட்டபடி என் உடைமைகளில் நான்கில் ஒரு பங்கு தருவதற்குச் சம்மதித்துவிட்டேன். அவர் வாக்கு தற்போது பலித்துவிடவே நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே ஆகவேண்டும்!'' என்றுகூறிவிட்டுத் திம்மரசு விஷயத்தைத் தொடர்ந்தார்.

''விஜயநகரத்தின் மன்னர் கிருஷ்ண தேவராயரின் மந்திரியாக இன்று விளங்கும் இதே திம்மரசு முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் சாதாரண இடைப் பையனாகத்தான் இருந்தான்'' என்று ஆரம்பிக்கவும் இளைஞன் அவர் சொல்வதைக் கேட்டுத் திகைத்துப் போனான்.

''இன்று மாட மாளிகையிலும் மலர் வனத்திலும் உல்லாசமாகப் பொழுது போக்கும் இதே திம்மரசு மரத்தடி நிழலையும், மணல் மேட்டையும் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தான் என்றால் நீ நம்ப மாட்டாய். அத்தகைய வாழ்க்கையை நடத்தி வந்த காலத்தில் தான் ஒருநாள் அதிசயிக்கத் தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதைக் கண்கூடாக நான் பார்க்கா விட்டாலும் அதன் உண்மையை ஒருவர் சொல்லக் கேட்டேன். அதன் பலனையும் அன்றே அவர் விளக்கிக் கூறினார். ஆனால் ஆட்டிடையனை எனக்குப் பகுத்தறிவற்ற மிருகங்களோடு பழகி வந்ததாலோ என்னவோ அப்பெரியார் சொன்ன



விஷயத்தில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் அவர் வாக்குப் பலிக்க ஆரம்பித்ததும்தான் அவர் பேரில் எனக்கு நம்பிக்கை உண்டாயிற்று. அந்தப் பெரியவர்தான் உன் தந்தை!'' என்றார், அப்பாஜி.

''என்ன... என் தந்தையா?'' என்றான் ஆச்சரியமுற்ற இளைஞன்.

''ஆம்; ஒரு நாள் பிற்பகல் பொழுது. ஆடுகளை மேய விட்டு விட்டு, களைப் பாறும் பொருட்டு மர நிழலில் படுத்துக் கிடந்தேன். களைப்பு மிகுதியால் கண்ணயர்ந்து விட்டேன். கண்விழித்தபோது, மாலை மயங்கியிருப்பதைக் கண்டுதான் எவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன் என்பதை அறிந்தேன். இதைவிட எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம் மற்றொன்று.


''பெரியவர் ஒருவர் — ஒட்டி உலர்ந்த சரீரம் — என்னையே வெறித்துப் பார்த்தபடி சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்தார். நான் தூக்கம் கலைந்து எழுந்தேன்.

''நான் அவரைக் கண்டு திடுக்கிட்டது போல் அவரும் என்னைப் பார்த்துத் திகைப்புடன் விழித்தார்.

'' 'தம்பீ!' என்று அன்பு ததும்ப அழைத்தார். அவரை நெருங்கினதும் அவர் சொன்ன விஷயம் என்னை எல்லை மீறிய பயத்துக்கு உள்ளாக்கியது. ''நீ உன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தாய். நான் இந்தப் பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது, நீ படுத்திருந்த இடத்தில் உன் தலைப் பக்கத்தில் கருநாகம் ஒன்று படம் விரித்தபடி இருந்தது. உன் தலைக்கு மேலே குடை பிடித்தாற்போல் அதன் படம் இருந்தது. இதைக் கண்டு நான் திகைத்து விட்டேன். பாம்பை விரட்டினால் உன் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேரக் கூடும் என்ற பயத்தால் நான் அசைவற்று நின்றுவிட்டேன். அதே சமயம் நீயாக விழித்துக் கொண்டாலும் பாம்பு உன்னைக் கடித்து விடுமோ என்ற பயமும் எனக்கு இருந்தது. ஆனால் அதிர்ஷ்ட வசமாகச் சற்று முன்பு பாம்பு தானாக மறைந்து விட்டது.? அதன் பின்புதான் நீ விழித்துக் கொண்டாய்!'' என்றார் அந்தப் பெரியவர். அவர் சொன்னதைக் கேட்கவும் என் உடம்பு சிலிர்த்தது. அவர் அதைப் பொருட்படுத்தாமல் மேலும் ஒரு விஷயத்தை என்னிடம் சொன்னார். அதாவது, 'கரு நாகம் தூங்கும் ஒருவன் தலைமாட்டில் படம் விரித்து நின்றால் அவன் பிற்காலத்தில் ராஜ குடும்பத்துடன் சேர்ந்து மிக உயர்ந்த நிலைக்கு வருவான்' என்றார். இவ்வாறு அவர் சொன்னது அப்போதைய என் நிலைக்கு மிகுந்த அவநம்பிக்கையைத்தான் உண்டாக்கியது. ஆகவே நான் அவரைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தேன். ''நீ இன்று ஏளனமாகச் சிரிக்கிறாய். நீ விரைவில் அரசாங்கத்தில் முக்கிய பதவிக்கு வருவாய்! என் வாக்கு ஒருபோதும் பலிக்காமற் போனதில்லை'' என்றார்.

''அப்போதும் எனக்கு நம்பிக்கை இல்லாதிருக்கவே, என்னை நம்பச் செய்யும்பொருட்டு, ''உன்னிடம் சொன்னபடி உன் நிலைமை உயர்ந்து விட்டால் அப்போது உனக்கிருக்கும் ஆஸ்திகளில் நான்கில் ஒரு பங்கை எனக்குத் தருவதாக ஒப்புக் கொண்டு இதில் கையொப்பமிடு'' என்று கூறி ஓர் ஓலையை என்னிடம் கொடுத்தார். நானும் நம்பிக்கையே இல்லாதவனாக அன்று அவர் கேட்டபடி 'இந்த நிலைக்கு நான் வந்து விட்டால் அப்போது எனக்குச் சொந்தமான ஆஸ்திகளில் நான்கில் ஒரு பங்கு உமக்குத் தருகிறேன். வாக்கைக் காப்பாற்றுவேன் — திம்மரசு' என்று கையொப்பமிட்டுக் கொடுத்தேன். அவர் அதைப் பெற்றுக் கொண்டு போய்விட்டார். ஆனால் அவர் கூறியது எனக்கு நம்பிக்கை தராததால் அதை நான் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை.

''நெடு நாளைக்குப் பின் ஒரு சமயம் நம் மன்னர் கிருஷ்ண தேவராயர் எதிரிகளின் வசம் சிக்கி உயிருக்கே ஆபத்து வரும் நிலையில் இருந்தபோது தற்செயலாக என்னால் ஓர் உதவி அவருக்குச் செய்ய முடிந்தது. மேலும் அவருக்கு நான் சில தந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தேன். அதன்படி அவர் செய்து வெற்றி காணவே, அவர் தம் நன்றியை எனக்குத் தெரிவிக்கும் வகையில் எனக்கு அரண்மனையில் சிறந்த பதவி ஒன்றை அளித்தார். என் அதிருஷ்டம், அவருடைய அன்புக்கு நான் பாத்திரமாகவே வெகு விரைவில் அவர் என்னைத் தம் மந்திரியாகவே ஆக்கிக் கொண்டார். நான் இந்த நிலைக்கு வந்த பின் கூட உன் தந்தையான அந்தப் பெரியவர் கூறிய வார்த்தைகள் என் நினைவுக்கு வரவில்லை. இன்று எதிர்பாராத வகையில் நீ இந்த ஓலையுடன் வரவும்தான் என் கடந்த காலச் சிந்தனைகள் என் மனத்தில் சுழல ஆரம்பித்தன. ஆகவே உன் தந்தையின் வாக்கு மெய்யாகி விட்ட இந்த நிலையில் அவருக்கு நான் கொடுத்த வாக்குப்படி என் ஆஸ்திகளில் நான்கில் ஒரு பங்கை மனதார உனக்கு அளிக்கிறேன்'' என்று கூறி அவன் தந்தைக்குத் தாம் இடையனாக இருந்தபோது கொடுத்த வாக்கைக் காப்பாற்றினார், கிருஷ்ணதேவராயரின் மதி மந்திரியான திம்மரசு.



தேனும் தேனீயும்

- கோலக் குழல் -

சோலையில் நன்கு பூத்துக் குலுங்கி நிற்கும் பூச்செடிகளைச் சுற்றி வட்டமிடும் தேனீக்களைப் பார்த்திருப்பாயே !

இவை, பூக்களிலிருந்து 'மகரந்தம்' எனப்படும் மிகவும் இனிப்பான பூந்தேன் துளிகளைச் சேகரிக்கவே அவ்விதம் வட்டமிடுகின்றன. நூறு கிராம் தேன் தயாரிக்க ஒரு தேனீ சுமார் பல லட்சம் பூக்களுக்காவது செல்ல வேணும்.

தேனீ, தனது உறிஞ்சு வாயின் மூலம் பூக்களில் உள்ள பூந்தேனை உறிஞ்சித் தேன் சேமிப்புக்கெனவே அமைந்துள்ள ஒரு கோசத்தினுள் சேர்த்துக் கொண்டு, அக்கோசம் நிரம்பியதும் தன் கூட்டுக்குத் திரும்புகிறது.

தேனீ, தேன் சுமை யில்லாமல் பூக்களுக்குச் செல்லும்போது, மணிக்கு அறுபது கிலோமீட்டர் அதாவது சுமார் 38 மைல் தூரம்கூடப் பறக்கிறது. தேன் சுமையுடன் திரும்பும்போது, மணிக்கு முப்பது கிலோ மீட்டர் வீதம் வருகிறது.

ஒரு கிலோகிராம் தேனைக் கூட்டில் சேர்க்க, தேனீ ஒரு லட்சம் தடவையாவது தேன் சுமையைத் தூக்கி வர நேருகிறது. தேன் கூட்டுக்கும், தேன் சேகரிக்க வேண்டிய இடத்துக்கும் ஒரு மைல் தூரம் இருக்குமானால், இது ஒரு கிலோகிராம் தேன் சேமிப்பதற்குள், பூமியைச் சுற்றி வரும் தூரத்தைக் கடந்துவிடுவதற்குச் சமமாகும்.

தேனைப் பூந்தோட்டத்திலிருந்து கூட்டுக்குள் கொண்டு சேர்க்கும் தேனீக்கள் வேறு; கூட்டினுள் இருந்து கொண்டு தேனைப் பதப்படுத்தும் தேனீக்கள் வேறு! இரை தேடி வந்த தேனீக்களிடமிருந்து வீட்டினுள் உள்ள தேனீக்கள் தேனைப் பெறுகின்றன. தேனீ தேனைக் கொண்டு வரும்போதே, அதன் இரைப் பையினுள் தேன் ஒருவிதப் பக்குவத்தை அடைந்துவிடுகிறது.

கூட்டிலுள்ள தேனீக்கள் அந்தத் தேனைப் பெற்றதும், மேலும் அதைப் பதப்படுத்துகின்றன. அதன் வயிற்றிலுள்ள தனியறையில் தங்கியுள்ள தேனை வாய்க்குக் கொண்டு வருவதும், திரும்ப வாயிலிருந்து அந்தத் தனி அறைக்குச் செலுத்துவதுமாக, 120 முதல் 140 தடவைகள் விழுங்குவதும் துப்புவதுமாகச் செய்து பிறகு, தேன் கூட்டினுள் ஓர் அறுகோணக் கண்ணறையினுள் அந்தத் தேன் சொட்டைக் காய வைக்கிறது.

இந்த நிலையிலும், அது பூந்தேனாகவே இருக்கிறது. பூந்தேனில் 40 முதல் 80 சதவீதம் தண்ணீர் கலந்துள்ளது. இந்த நீர் உலர்ந்து 15 முதல் 20 சதவீதத்துக்கு அது சுண்டும் வரையில் அதை உலர வைக்கவே இந்தக் கண்ணறைகளில் தேன் துளிகளைத் தேனீக்கள் தொங்கவிடுகின்றன. ஓர் அறையில் தொங்கவிட்டுள்ள தேன் துளியை மற்றோர் அறைக்கு மாற்றும் இந் நிகழ்ச்சிகள் தொடர்ந்து பல முறைகள் நடைபெறுகின்றன.

தேனிலுள்ள தண்ணீர்ப் பாகத்தைக் காய வைக்க, தனது சிறகை நிமிடத்துக்கு 26,400 தடவைகள் மேலும் கீழும் அசைத்து விசிறி கூட்டில் காற்றோட்டத்தை விதிகமாக்குகின்றன தேனீக்கள்.

பூந்தேனிலுள்ள தண்ணீர் ஆவியாகி முதிராத பாகு பதத்துக்கு வந்ததும், அந்தக் கண்ணறைகளின் வாயிலை, மெல்லிய மெழுகுத் திரை கொண்டு மூடிவிடுகின்றன. இவ்விதம் கண்ணறைகளில் மூடப்பட்டுள்ள தேன் எத்தனை யுகமிருந்தாலும் கெடுவதில்லை.

தேன்களின் நிறம் பலவகைப்பட்டது. நல்ல கரும் தேனிலிருந்து, கண்ணாடி போன்ற வெளிறிய நிறத் தேன் வரை பல நிறமுள்ள தேன்கள் இருக்கின்றன.

வெளிறிய நிறத் தேன் மிகவும் உயர்ந்தது. கண்களுக்கு இடுவது போன்ற பல உயரிய சிகிச்சைகளுக்கு இது பயன்படுகிறது.

கருமை கலந்த செந்நிறத்தில் காணும் தேன்தான் எங்கும் கிடைக்கும். கருநிறமுள்ள தேனில் இரும்பு, தாமிரம், மங்கனீஸ் போன்ற உலோகச் சத்துகள் அதிகமாயிருப்பதால் இது சிறந்த உணவுப் பொருளாகிறது.

தேனின் வகைகளும் அதன் ருசியும் கிடைக்கும் இடத்தைப் பொறுத்து வேறுபடுகின்றன.



காக்கை தந்த வைரமாலை

சிற்பி சோமு

அந்த ஊரில் செல்லம்மா குடி வந்த போது முத்தன் கைக் குழந்தையாயிருந்தான். பல வீடுகளில் வேலை செய்து தன் மகனை வளர்க்கப் பாடுபட்டாள். உருவ அமைப்பில் முத்தன் வளர்ந்தானே தவிர அறிவில் வளரவில்லை. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்தால் புளிய மரத்தடியில் போய்க் குண்டு விளையாடுவான். அவனுக்குப் படிப்பு ஏறவில்லை. அவனை எல்லோரும் 'முட்டாள் முத்தன்' என்று அழைத்தனர்.

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே! செல்லம்மா தன் மகன் முட்டாள் முத்தனை வெறுத்துவிடாமல் அவன் மேல் மிகவும் அன்பாய் இருந்து வரலானாள். அவனும் வளர்ந்து வாலிபனானான்.

வயசுக்கு வந்துவிட்ட முட்டாள் முத்தனுக்கு ஒரு கல்யாணம் செய்து பார்க்க ஆசைப்பட்டாள் செல்லம்மா.

ஒரு நாள் தன் மகனைக் கூப்பிட்டு, ''முத்தா! நம்ம பசு மாட்டைக் கொண்டு போய்ச் சந்தையில் விற்றுவிட்டு வா! இருநூறு ரூபாய்க்கு மேல் விற்க வேண்டும். அதைக் கொண்டு உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன்'' என்றாள்.

முட்டாள் முத்தன் மாட்டைப் பிடித்துக் கொண்டு போனான். அன்று ரொம்ப வெயிலாக இருந்தது. அவன் வெயிலில் களைத்துப் போய்விட்டான். வழியில் ஒரு மரத்தில் மாட்டைக் கட்டிவிட்டு மரத்து நிழலில் படுத்து நன்றாகத் தூங்கிப் போனான். அவன் கண் விழித்தபோது பொழுது போய் விட்டது. சந்தை கலைவதற்குமுன் மாட்டைக் கொண்டுபோய் விற்றுவிட வேண்டும் என்று எண்ணி மாட்டை அவிழ்க்கப் போனான். அப்போது அந்த மரத்துக் கிளைகளில் ஒன்றில் உட்கார்ந்திருந்த காகம் ஒன்று ''கா! கா!'' என்று கத்தியது. முட்டாள் முத்தனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அந்தக் காகம் தன்னுடைய மாட்டை வாங்க வேண்டும் என்று எண்ணித் தன்னைக் கூப்பிடுகிறதென்று நினைத்தான்.

அவன் காக்கையைப் பார்த்து, ''உனக்கு மாடு வேண்டுமா?'' என்று கேட்டான்.

காகம் மறுபடியும் ''கா! கா!'' என்று கத்தியது.

''ஓகோ! உனக்கு வேண்டுமா? அப்படியானால் இருநூறு ரூபாயாகிறது. கொடுக்கிறாயா?'' என்று கேட்டான் முத்தன்.

அதற்கும் காக்கை ''கா! கா!'' என்று கத்தவே அவன், ''அப்படியானால் உனக்குச் சம்மதந்தானே! எடு ரூபாயை!'' என்றான்.

''கா! கா!'' என்று மறுபடியும் அக்காகம் கத்தியது.

''ரூபாய் நாளைக்குத் தருகிறேன் என்கிறாயா? கட்டாயம் நாளைக்குக் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் என் அம்மா கோபிப்பாள். என்ன சொல்லுகிறாய்?'' என்றான்.

மீண்டும் ''கா! கா!'' என்று அந்தக் காக்கை கத்தவே அவன், ''சரி, நாளைக்குத் தவறாமல் கொடுத்துவிடு. இதே நேரத்துக்கு நான் வருகிறேன். தெரிகிறதா! மாட்டை இங்கேயே கட்டிவிட்டுப் போகிறேன்'' என்று சொல்லி மாட்டை அங்கேயே விட்டு விட்டு வீடு திரும்பினான்.

தன் மகன் மாட்டைச் சந்தையில் விற்றுவிட்டு வந்திருக்கிறான் என்று நினைத்து, ''மாட்டை என்ன விலைக்கு விற்றாய்?'' என்று கேட்டாள் செல்லம்மா.

''இருநூறு ரூபாய்க்கு'' என்றான் முட்டாள் முத்தன்.

''இருநூறு ரூபாய்க்கா? பணம் எங்கே?'' என்றாள் அவன் தாய்.

''பணம் நாளைக்குக் கிடைக்கும்'' என்றான் முத்தன்.

''ஓ முட்டாளே! எங்கேயாவது சந்தையில் போய் மாட்டைக் கடனுக்கு விற்றுவிட்டு வருவார்களா?'' என்று கோபித்தாள் செல்லம்மா.

''இல்லையம்மா! நாளைக்கு நான் போய்க் கட்டாயம் பணம் வாங்கி வருகிறேன்'' என்றான்.

'சரி, எவனோ இவனை ஏமாற்றி மாட்டைக் கொண்டு போய்விட்டான். இனிமேல் பணம் எங்கே கிடைக்கப் போகிறது?' என்று தன் விதியை நினைத்து நொந்து கொண்டிருந்தாள்.

மறு நாள் காலை. வீட்டில் சொல்லாமல் கொள்ளாமல் முட்டாள் முத்தன் நேரே முதல் நாள் சென்ற

இடத்துக்குச் சென்றான். அங்கு மாடு இல்லை. மரக் கிளையில் காகம் மட்டும் இருந்தது.

'' ஏ காகமே! என் அம்மா ரொம்பவும் கோபிக்கிறாள். சீக்கிரம் பணம் கொடு. நான்போகவேண்டும்'' என்றான்.

காகம் வழக்கம்போல் ''கா! கா!'' என்று கத்தியது.

''என்ன மறுபடியும் நாளைக்கு வாயி தாவா ? அதெல்லாம் முடியாது. இப்பவே தர வேண்டும். இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்'' என்று சொல்லி மரத்தின் மேல் ஏறினான். அப்பொழுது காகம் பறந்து வேறொரு கிளைக்குப் போய் உட்கார்ந்து ''கா ! கா !'' என்று கத்தியது.

'' ஓகோ ! பணம் அங்கே வைத்திருக்கிறாயா? சரி'' என்று அந்தக் கிளைக்குத் தாவினான் முத்தன். காகம் பறந்து சென்றுவிட்டது. அந்தக் கிளையில் ஒரு பொந்து இருந்தது. அதைப் பார்த்ததும் முட்டாள் முத்தன் அதில்தான் காக்கை பணம் வைத்திருக்கிறது என்று எண்ணி அந்தப் பொந்தில் கையை விட்டான். என்ன ஆச்சரியம் ! அவன் கையில் ஒரு வைர மாலை கிடைத்தது! அதை அவன் எடுத்து ஒரு துணியில் சுற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அதைத் தன் தாயிடம் கொடுத்து நடந்ததை விவரமாகச் சொன்னான். அவளுக்கு ஒரே ஆனந்தம். எல்லாம் கடவுள் அருள் என்று எண்ணினவளாய், அந்த மாலையை எப்படி விற்றுக் காசு பண்ணுவது என்று பலத்த யோசனையில் ஆழ்ந்தாள்.


அப்பொழுது வீதியில் சேவகன் ஒருவன் ''ராணியின் வைர மாலை குளிக்கும்போது காணாமல் போய் விட்டது. அதைத் தேடிக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும்...ம்...ம்...'' என்று தண்டோரா போட்டுக் கொண்டு போனான்.


இதைக் கேட்ட செல்லம்மா ஓடிச் சென்று தன்னிடமிருந்த வைரமாலையை ராஜாவிடம் கொடுத்துக் கிடைத்த விதத்தை விளக்கினாள்.

ராஜா வெகுவாகச் சந்தோஷப்பட்டு அவளை மெச்சிப் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள அந்த வைரமாலையைத் திருப்பித் தந்தமைக்காகப் பாராட்டியதுடன் பரிசு ரூபாய் ஆயிரம் என்பதை மாற்றி இரண்டாயிரமாகக் கொடுத்து முட்டாள் முத்தனுக்கு ஒரு வேலை போட்டுத்தருவதாகவும்வாக்களித்தார்.

செல்லம்மாவின் ஆனந்தத்துக்குக் கேட்கவும் வேண்டுமா ? தன் விருப்பப்படி அவனுக்கு ஒரு கல்யாணம் செய்து வைத்தாள், 'ஜாம் ஜாம்' என்று!

கையில் பணம் சேர்ந்ததும் முட்டாள் முத்தன் கொஞ்சம் கொஞ்சமாகத் திறமையடைந்து இப்பொழுது வெகு சாமர்த்தியசாலியாக அரண்மனையில் வேலை செய்து வருகிறான்.




ஷீலாவைக் காணோம்
15
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
துரத்தி வருபவர்கள் நெருங்குவதற்குள் நினைவிழந்து கிடக்கும் ஷீலாவை மறைத்து வைக்கத் திட்டமிட்டது டைகர். அவள் பின்னலைக் கௌவி ஒரு புதர் மறைவுக்கு இழுத்துச் சென்றது..
அந்தப் பயல்கள் இந்தப் பக்கமாகத் தான் வருவார்கள். ஷீலா அவர்கள் பார்வையில் சிக்காமல் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்.
இந்தக் கிளையை இழுத்து வளைத்து ஷீலாவை மூடிய படி...
அதன் மீது அழுத்திக் கொண்டு உட்காருகிறேன். இலைகள் அடர்ந்த இந்தக் கிளை ஷீலாவை மட்டுமல்ல, என்னையுமே அவர்கள் பார்வையில் படாமல் காப்பாற்றி விடும். அதோ ஓடுகிறார்கள் திருடர்கள். ஓடட்டும்...
அவர்கள் ஓடியதும், நினைவிழந்து கிடக்கும் ஷீலாவை, கண் விழிக்கச் செய்வதில் தீவிரக் கவனம் செலுத்தியது டைகர். அவளுடைய கைக்குட்டையை எடுத்துக் கொண்டு ஓடைக்கு ஓடியது..


ஷீலா. சீக்கிரம் கண் திறந்து— பாரம்மா. அந்தத் திருடர்கள் திரும்பி வருவதற்குள் நாம் தப்பி விட வேண்டாமா?
தது? குதிரை எங்கே? ஆ.. அம்மா! நல்ல வேளை. அடி ஏதுமில்லை சரி வா. இனி ஓடு வதைத் தவிர வேறு மார்க்கமில்லை.
டைகர். அதோ அந்த கொடியவர்கள் மீண்டும் நம்மைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பக்கமாகத்தான் வருகிறார்கள்...
குறுக்கு வழியில் விரைந்த டைகர் ஓடைக் கரைக்கு வந்த போது ஒரு காட்டு மரம் நீரில் மிதந்து வருவதைக் கண்டு அதைக்— கௌவிக் கரைக்கு இழுக்கிறது...
அந்த மரத்தில் ஷீலாவும் டைகரும் தாவி ஏறிக் கொள்ள நீரோட்டத்தில் அக்கட்டு மரம் மிதந்து செல்லுகிறது. ஆனால் அதற்குள் அந்த அயோக்கியர்கள் இருவரும் அங்கு வந்து விடுகிறார்கள்...


தொடரும்..

வட்டமும் முக்கோணமும் வந்த விதம்

ஸி. ராஜப்பா







பாபு: ஹலோ ரமேஷ்! வாடா! என்ன வேணும்?

ரமேஷ்: கொஞ்சம் 'ஜியாமெட்ரி பாக்ஸ்' கொடுப்பியா! அரை மணியிலே திருப்பிக் கொடுத்திடறேன்.

அப்பா: ஏண்டா பாபு! நீங்களெல்லாம் 'ஜியாமெட்ரி' கணக்குப் போட றீங்களே! அம்மா பார்! ஜியாமெட்ரி பாக்ஸ் இல்லாம வட்டமும், முக்கோணமும் எவ்வளவு 'கரெக்டா' கோலத்திலே போடறாங்க..... பார்த்தீங்களா? இந்த 'வட்டமும் முக்கோணமும்' எப்படி வந்தது தெரியுமா உங்களுக்கு?

ரமேஷ்: மாமா, மாமா! அதைப் பற்றிக்கூடக் கதை இருக்கா? அப்படின்னு சொல்லுங்க மாமா!

அப்பா: 'ஜியோ' என்பது கிரேக்க வார்த்தை. அதற்கு 'நிலம்' என்பது பொருள். 'மெட்ரன்' என்பதற்கு அளவுகள் என்று அர்த்தம். நிலத்தின் மேல் பரப்பை அளந்து கணக்கிட உதவும் முறை என்பதே 'ஜியாமெட்ரி' என்று சொல்லப்படுகிறது. புரிஞ்சுதா?

ராஜி: அம்மா... அம்மா.... நீயும் வந்து கேளும்மா.... உனக்கு இன்னும் நல்லா வட்டம், முக்கோணம் எல்லாம் கோலம் போடும்போது போட வரும்.

அம்மா: இதோ வந்துட்டேண்டா, கண்ணு!

அப்பா: 'இந்த 'ஜியாமெட்ரி' என்ற ஜியாமிதியைக் கண்டுபிடித்தவர் 'யூக்ளிட்ஸ்' என்ற ஒரு கிரேக்க கணித மேதை. யூக்ளிட்ஸின் சித்தாந்தம்' என்று நீ இன்னும் இரண்டு வகுப்பு மேலே போனால் படிப்பாய்!

பாபு: இந்த யூக்ளிட்ஸ் தான் முதலில் வட்டமும் முக்கோணமும் போட்டுக் காண்பித்தாரா அப்பா?

அப்பா: ஆமாம் பாபு! 'ஜியோமிதியின் தந்தை' என்றே யூக்ளிட்ஸைச் சொல்வதுண்டு. ஆனால் உங்களைப் போல் அவர் நோட்டுப் புத்தகத்திலும், சிலேட்டிலும் வட்டம் போடவில்லை.

ராஜி: பின்னே நிலத்திலே அம்மா கோலம் போடறாப்லே போட்டுப் பார்த்தாரா?

அப்பா: கரெக்ட் ராஜி! கரெக்ட்! ஆனால் அம்மா மாதிரி அவர் கோலம் போடல்லேம்மா! ரொம்ப முக்கிய வேலை செய்திருக்காரு!


பாபு: சொல்லுங்கப்பா! சீக்கிரம் சொல்லுங்கப்பா!

அப்பா: 'எகிப்து' என்று படித்திருப்பீர்களே.... பூகோளத்திலே!

ரமேஷ்: ஓ, தெரியுமே....! நைல் நதி அங்கேதான் ஓடறது.... 'எகிப்தின் நன்கொடை' என்று அந்த நைல் நதியைச் சொல்வது உண்டே... இல்லையா, மாமா?

பாபு: ஆப்பிரிக்காவிலே தானே இருக்கு?

அப்பா: ரொம்ப சரி! அந்த எகிப்தில் வருடந்தோறும் விளைநிலங்களின் விஸ்தீரணத்தை வரையறுத்து எல்லை வகுக்க வேண்டியிருந்தது. ஏன் தெரியுமா? நைல் நதியில் வெள்ளம் வந்து விட்டால், அதனாலே விளைநிலங்கள்





எல்லாம் ஒரே மணல் காடாக மூடிப்போய்வி டும். எந்த நிலம், எவ் வளவு விஸ்தீரணம், யாருக்குச் சொந்தம் எதுவுமே வரையறுக்க முடியாமல் போயிடும். இந்த மாதிரி நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் விளை நிலங்களின் உண்மை வடிவம், அவற்றின் பரப்பு, இவைகளை முறைப்படி கணக்கிட்டுப் பாரபட்சமில்லாமல் வரையறைகள் நிர்ணயிக்க இந்த யூக்ளிட்ஸின் ஜியோ மிதி முறை பெரிதும் பயன்பட்டு வந் திருக்கு. புரிஞ்சுதா இப்ப?

ரமேஷ்: ஓஹோ! ராஜி சொன்னுப் பலே ஜியோமிதி முதல்லே நிலத்தை அளக்கறதுக்கு நிலத்திலேதான் போடப் பட்டதா மாமா?

அப்பா; ஆமாம்... ஆமாம்..... பாபி லோன் தெரியுமா?

ராஜி: தெரியும்பா! அங்கேதானே 'தொங்கு தோட்டம்' இருக்கு! உலக ஏழு அதிசயத்திலே ஒண்ணு அது. இல் லையாப்பா?

அம்மா: ராஜி 'பளிச்'னு சொல் லிட்ருளே... கரெக்டா!

பாபு: ஆஹா! பிரமாதம்... எனக்கு மட்டும் தெரியாதாக்கும்?

அப்பா: அந்த பாபிலோனில்தான் ஜியோமிதி சம்பந்தமான வடிவங்களில் நிலப் பகுதிகள் ஆரம்பத்தில் கணக் கிடப்பட்டன. சாதாரண நிலங்களை வரையறுப்பதிலிருந்து ராஜ்யங்களின் எல்லைகளை வரையறுப்பது வரை ஜியோ மிதி பயன்பட்டு வந்தது. இன்றும் பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கு!

அம்மா: அதனுலேதான் எல்லை தாண்டி பாகிஸ்தான் துருப்பு வந்துட் டது, சீனத் துருப்பு வந்துட்டது, வியட் நாம் துருப்பு வந்துட்டதுன்னு சொல்ல முடியறது, இல்லீங்களா?

அப்பா (சிரித்தபடி): பிரமாதம் மீனு! குழந்தைகளோடு குழந்தையா உனக்கும் பொது அறிவுப் பாடம் தெரியறதே!

பாபு: அப்பா... அப்பா! எங்களுக்கு ஜியோமிதியிலே 'தீரம்' நடத்தறுங்களே அதைக் கூட இந்த யூக்ளிட்ஸ்தான் கண்டுபிடித்தாரா?

அப்பா: நல்ல கேள்வி கேட்டே போ! ஜியோமிதி சம்பந்தமான உண்மைகளை யூக்ளிட்ஸின் சித்தாந்தங்களைத் தொகுத் துத் 'தேற்றங்'களாக அதாவது 'தீரம்' களாக அவற்றை ஆராய்ந்து அவசிய மான மாறுபாடுகளைச் செய்து உதவி யிருப்பவர் இந்தக் கணித மேதை 'யூக் ளிட்ஸ்'தான்!

ராஜி: இதெல்லாம் எப்ப அப்பா நடந்த கதை?

அப்பா: ராஜிக் கண்ணு! இரண்டா யிரம் வருஷங்களுக்கு முன்னுலே நடந்த கதை இது.

பாபு: இந்த 'யூக்ளிட்ஸ்' மட்டும் எப்படி முதன் முதலாக இதையெல் லாம் தெரிந்து கொண்டார் அப்பா?

அப்பா: அதுதானே பார்த்தேன், இந்தக் கேள்வியை யாரும் கேட்காமல் உட்கார்ந்திருக்கிறீர்களே என்று. சொல் றேன் கேளுங்கோ. அலெக்ஸாண்டி ரியா என்ற நகரம் மகா அலெக்ஸாந் தர் பெயரிலே ஏற்படுத்தப்பட்டது. அதைத் தாலமி என்ற ராஜா ஆண்டு வந்தான். அவனை 'முதலாம் தாலமி' என்று சொல்றதுண்டு. அவன் கணக் கிலே கரை கண்டவன். அதாவது பெரிய கணித மேதை.

பாபு: யூக்ளிட்ஸை விடவா?

அப்பா: இல்லை, இல்லை. அவனே யூக்ளிட்ஸின் சித்தாந்தத்தை யெல்லாம் பாராட்டி அவரிடமே தம் சந்தேகங் களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு ஒரு மாணவன் போல் பழகி வந்திருக்கிறுன். தெரியுமா?

ரமேஷ்: அடேயப்பா! யூக்ளிட்ஸ், தாலமியைவிடப் பெரிய கணக்குப் புலி போலிருக்கே?

அப்பா: சந்தேக மென்ன ரமேஷ்! இந்த ஜியோமிதி கணக்கு உங்களுக்கு மட்டும் சிரமமாக இருக்கும் என்று எண்ணி விடாதே! தாலமி மன்னனே அதை யூகிளிட்ஸிடம் கற்றுக்கொள்ளும் போது திணறிப் போனுனும். ஒரு சம யம் தாலமி கேட்டானும், யூகிளிட்ஸி டம்: 'ஜியாமிதியைக் கற்றுக்கொள்ளச் சுருக்கு வழி ஏதுமில்லையா?' என்று. அதுக்கு அவர் சொன்னுராம். 'ஜியோ மிதிக்குப் போக ராஜபாட்டை ஏதும் கிடையாதப்பா'ன்னு. அதாவது உழைத்துத்தான் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியும்னு சொல் லாமல் சொன்னுராம். உலகின் முதல் மிகப் பெரிய எலிமெண்டரிக் கணக்குப் புத்தகத்தை எழுதியவர் யூகிளிட்ஸ் தான். இதற்கு 'எலிமெண்ட்' என்றே பெயர். கி. மு. 300ல் எழுதப்பட்டது

இது. இதில் பல்வேறு கணிதாசிரியர் களின் தீரங்களை யெல்லாம் எளிமை யாக்கித் தொகுத்துக் கொடுத்திருக் கிறார் யூக்ளிட்ஸ்.

முதலாம் தாலமி அலெக்ஸாண்டிரியா விலே அழகிய மியூஸியம் ஒன்றையும் லைப்ரரி ஒன்றையும் உருவாக்கினான். அறிவு வளர்ச்சிக்குப் பலவிதங்களிலும் பயன்படும் பல நூல்களை அந்த நூல் நிலையத்தில் சேர்த்திருந்தான் தாலமி. பிறகு அந்த நூல் நிலையமே புகழ் பெற்ற பல்கலைக் கழகமாக மாறிச் சிறந்த ஆராய்ச்சியாளர்களைத் தயாரித் தது. இந்தப் பல்கலைக் கழக மாணவர் தான் யூக்ளிட்ஸ்! அவரது ஜியோமிதி சம்பந்தமான கணித ஆராய்ச்சி நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலா கியும், இன்றைக்கும் கணித நிபுணர் களைக் கவர்ந்திருக்கு. அப்படின்னு அவரை எத்தனை பெரிய மனுஷர்னு நாம் நினைக்க வேண்டியிருக்கு, பார்த் தீங்களா?

பாபு, ரமேஷ், ராஜி (ஏகக் குரலில்): ரொம்பப் பெரிய மேதைதான் அந்த யூக்ளிட்ஸ்!

அப்பா: யூக்ளிட்ஸ், தாலமி மன்ன னின் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கணிதத்தில் புலமை பெறும்போது அவ ருக்கு வயது முப்பத்தாறு முடிஞ்சுட்டது ஒரு சமயம் இந்தப் பல்கலைக் கழகத் தில் இவர் கணிதம் போதிக்கும்போது ஒரு மாணவன் எழுந்திருந்து 'இவைகளை யெல்லாம் கற்றுக் கொள்வதனால் எனக் கென்ன பிரயோசனம்?' என்று கேட்டா னாம். உடனே யூக்ளிட்ஸ் தம் பணி யாளனைக் கூப்பிட்டு, 'இவனிடம் கொஞ்சம் பொருள் கொடுத்தனுப் பப்பா. லாபம் தேடத்தான் இவன் இங்கு படிக்க வந்திருக்கிறான்' என்றா ராம். அறிவு வளர்ச்சிக்குப் படிக்கும் போது பொருள் தேடும் தகுதி அதற்கு உண்டா என்று கணக்கிடக் கூடாது என்பதே யூக்ளிட்ஸின் கருத்து.

பாபு: அந்தப் பல்கலைக் கழகத்திலே யும் அவர் மேலும் படிச்சுட்டிருந் தாரா அப்பா?

அப்பா: படிப்புக்கு வயசு ஏது? ஆர்வம்தான் முக்கியம். அந்த மாதிரி படித்து, ஜியோமிதியை உலகுக்கு அறி முகம் செய்து நூலும் எழுதியிருப்ப தாலே அவர் பெயரையே அந்தக் கணித நூலுக்கு வைச்சுட்டாங்க. அத னாலே புத்தகத்தை எழுதினவர் பெய ரும் யூக்ளிட்ஸ் — அவர் எழுதியிருக்கிற ஜியோமிதி சித்தாந்தங்களடங்கிய புத்த கம் அதாவது 2000 வருஷங்களுக்கு முன்னாலேயே எழுதப்பட்ட கணித நூல் இருக்கே அதன் பெயரும் 'யூக்ளிட்ஸ்' தான்.

ரமேஷ்: வட்டமும் முக்கோணமும் எப்படி வந்ததுன்னு கேட்டா 'யூக ளிட்ஸ்'தான் என்று உடனே சொல்லி விடுவேன். ரொம்பப் பிரமாதம் மாமா இந்தக் கதை.

ராஜி: ரமேஷ்! இது கதை இல்லே. வரலாறு. ஞாபகம் வச்சுக்கோ.

அப்பா: கிரேக்க நாட்டு வீரர்கள், விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள் பல ரைப் பற்றிச் சொல்லும்போது கணித மேதையான யூக்ளிட்ஸை நாம் மறக் கவே முடியாது. இன்னொரு முக்கிய விஷயம், சொல்ல மறந்துட்டேன் உங்களுக்கு!

ராஜி: என்னப்பா அது?

அப்பா: இத்தனை பெரிய மேதைக்கு அன்றைக்கு எழுதறதுக்குப் பேப்பரோ, பென்ஸிலோ கிடையாது. அது தெரியுமா?

அம்மா: அட பாவமே! நம்ம பாபு வும் ராஜியும் வருஷத்திலே ஒரு டஜன் கணக்கு நோட் போறல்லேங்கறாங்களே, இவங்க போட்ற கணக்குக்கு....!

அப்பா: உன் பிள்ளையும் பெண்ணும் அப்படி! யூக்ளிட்ஸுக்கு யார் கணக்கு நோட் வாங்கித் தருவா?


ரமேஷ்: பின்னே எதிலே மாமா அவர் இந்த அற்புதமான தேற்றங்களை யெல்லாம் போட்டார்?


அப்பா: காய்ந்த இலைகளில் ஜியோ மிதி வடிவங்களை யூக்ளிட்ஸ் மிக நுணுக் மாக வரைந்து பாதுகாத்து வந்தார். தோலினால் ஆன துணிகளிலும் பாபி ரஸ் என்ற புல்லைக் கொண்டு உருவாக்கப் பட்ட ஒருவகைக் காகிதங்களிலும் தம் கணிதங்களை வரைந்தார். நீண்ட சதுர மரப் பெட்டிகளிலே நன்றாகச் சலித்த மணலை நிரப்பி; கூர்மையான குச்சியின் உதவியாலே ஜியோமிதி வடிவங்களை அமைத்துக் கணக்கிடுவார் யூக்ளிட்ஸ்!

அம்மா: ரொம்பப் பொறுமைசாலி போலிருக்கு! எனக்குக் கோலம் போடும் போது சரியாக வரல்லையானால் என்ன கோபம் வருகிறது... அவர் பாவம்! இவ்வளவு பொறுமையா வட்டமும் முக் கோணமும் போட்டிருந்திருக்கிறாரே ?

அப்பா: தேவையற்றதை அழித்து, மறுபடியும் வரைவதற்குச் சௌகரிய மாக யூக்ளிட்ஸ் மணலிலே வரையும் இந்த முறையை மேற்கொண்டிருந்தார். அப்படிப்பட்ட மேதையின் கண்டு பிடிப்புதான், இன்று நீங்கள் போட்டுப் பார்க்கும் 'ஜியாமெட்ரி' கணக்குகள், புரிந்ததா?

சிரிக்கச் சிரிக்க..!


"சளசளன்னு என்ன பேச்சு? வாயை மூடிண்டு வாயை நன்னாத் திற."
பல் வைத்தியர்
"இது ஏதடா வம்பு? வாயை மூடிண்டு வாயை எப்படி நன்னாத் திறப்பது?"
பல் வைத்தியர்
"எங்க வாத்தியார், கோழிமாதிரியே 'கொக்கரக் கோ'ன்னு கத்துவார்...."
"....அப்படியே கோழியை 'இமிடேட்' பண்ணிச் சிறகடித்து நடப்பார்...."
"....ஆனால் அவரால் ஒன்னுமட்டும் செய்ய முடியாதுன்னு நினைக்கிறேன். கோழி முட்டை போடுவாரா?"
"....ம்....அதுவும் போடுவார். இதோ பார்!"
0/100
"நீ போட்டுக் கொடுத்த வீட்டுக் கணக்கு அத்தனையும் தப்பு."
"ஏன்டா ஒரு லெட்டர் போடப்படாதோ? உனக்குச் சிரமம் கூடாதுன்னு ரீப்ளை கார்டு எழுதி இருந்தேனே?"
"ஏன் அதுகூடப் பேறு அனுப்பவில்லே? அதனால்தான் பதில் போடவில்லே!"
எனக்குத்தான் அந்தப் பழம்!



A. மின்பொறிச் சாதனம் (ஸ்பார்க்கிங் பிளக்). B. எரி பொருள் ஆவி வந்து தங்கும் அறை. (காஸ் சேம்பர்) C. இன்லெட், எக்ஸாஸ்ட் வால்வுகள். D. கார்பரேட்டர். E. பிஸ்டன். F. பிஸ்டனோடு இணைந்துள்ள உலோகத் தண்டு. G. 'க்ராங்க், ஷாஃப்ட். H. எக்ஸாஸ்ட் பைப்.

நானும் சுவாசிக்கிறேன்

கிருஷ்ணவேணி

''மேல் வகுப்புக்குப் போய்ப் புதுப் புத்தகங்கள் எல்லாம் வாங்கியாச்சு போலிருக்கே?'' என்று கேட்டது ஆட்டோ. ''புதுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கும் ஆர்வத்தில் என்னைக்கூடத் திரும்பிப் பார்க்கவில்லையே!''

''ஆட்டோ சார்! நீங்க சொன்ன உங்களோட கதையெல்லாம் என்னுடைய புதுப் புத்தகத்திலே கொஞ்சம் வந்திருக்கு'' என்றான் உஷா.

''இன்டர்னல் கம்பஸ்சன் பற்றி உன்னோட அறிவியல் புத்தகத்திலே வந்திருக்கும். அப்படித்தானே?'' என்று கேட்டது ஆட்டோ.

அதற்குள் ரமணி புதுப் புத்தகங்களை மூடி ஓரமாக வைத்துவிட்டு, ''ஆட்டோ சார், அதெல்லாம் ஒண்ணும் வரலே. மோட்டார் காரின் தோற்றம் பற்றி ஒரு சின்னப் பாடம் வந்திருக்கு. அது போகட்டும். நீங்கள் இன்று உங்களுடைய இயக்கம் பற்றி விளக்கறேன்னு சொன்னீங்களே. அதைச் சொல்லுங்க'' என்றான்.

''நீ வேலை செய்வதற்குத் தேவை எது?'' என்று கேள்வி போட்டது ஆட்டோ.

''சக்தி...''

''சக்தி பலவகைப்படும். உஷ்ணமும் ஒரு வித சக்திதான். வேலைகளைச் செய்வதற்கு உஷ்ணமும் சக்தியாகப் பயன்படுகிறது. மனிதன் உஷ்ணத்தின் சக்தியைப் பயன்படுத்திப் பலன் பெற நீண்ட காலமாகவே அறிந்திருக்கிறான். உஷ்ணத்தை வேலை செய்யும் சக்தியாக மாற்ற யந்திரங்களை உருவாக்கலானான்.

''ஆட்டோ சார் யந்திரங்களைப் பற்றி ரொம்ப விஸ்தாரமாகச் சொல்லப் போகிறார் போலிருக்கு'' என்றாள் உஷா.

''அதெல்லாம் இல்லை. ரொம்பச் சுருக்கமாகத்தான் என் கதையைச் சொல்லி முடிக்கப் போறேன். எனக்கு உங்களோட ரொம்ப நேரம் பேசச் சக்தி கிடையாது.... ம்.... என்ன சொன்னேன்?'' என்றது ஆட்டோ.

''மனிதன் சக்தியைப் பெற யந்திரங்களை உருவாக்கலானான் என்று சொன்னீர்கள்.''

''ஆ! உஷ்ணத்தை வேலை செய்யும் சக்தியாக மாற்றும் யந்திரங்களுக்கு வெப்ப யந்திரங்கள் (ஹீட் என்ஜின்ஸ்) என்று பெயர். இவைகளைத் தெர்மல் யந்திரங்கள் என்றும் சொல்வார்கள்.''

'' 'தெர்மல் பவர் ஸ்டேஷன்' என்றெல்லாம் பத்திரிகைகளில் வருகிறது. படித்திருக்கிறேன்'' என்றான் ரமணி.

'' 'தெர்மல்' என்பது கிரேக்க மொழியிலிருந்து வந்தது. தெர்மஸ் என்றால் கிரேக்க மொழியில் உஷ்ணம் என்று பொருள். வெப்ப யந்திரங்கள் பல வகைப்படும். நீராவி யந்திரங்கள், இண்டர்னல் கம்பஸ்சன் என்ஜின், ஸ்டீம் டர்பைன், காஸ் டர்பைன் ஆகியவை முக்கியமானவை. இந்த யந்திரங்கள் எரி பொருள்களிலிருந்து கிடைக்கும். உஷ்ணத்தை யந்திர சக்தியாக மாற்றி இயங்கக் கூடியவை. இந்த யந்திர சக்தி சலனத்தை ஏற்படுத்துகிறது. சுருங்கச் சொல்வதானால். எரிபொருள்—உஷ்ணம்—யந்திர சக்தி.''

''நீங்கள் இண்டர்னல் கம்பஸ்சன் யந்திர வகையைச் சேர்ந்தவர்தான் இல்லையா?'' என்று கேட்டாள் உஷா.

''ஆமாம். கம்பஸ்சன் — அதாவது எரிபொருள், என்ஜினுக்குள்ளே (சிலிண்டரில்) எரிக்கப்படுவதால் எனக்கு இந்தப் பெயர். நீராவி யந்திரத்தில் இதற்கு நேர் மாறு. எரிபொருளின் எரிப்பு என்ஜினுக்கு வெளியே அதாவது பாய்லரில் நிகழ்கிறது. அது உருவாக்கும் நீராவி, யந்திரத்தை இயக்குகிறது.

''நவீன ஆட்டோ கார்களில் உள்ளது நான்கு இயக்கநிலை என்சின்கள். (ஃபோர் ஸ்ட்ரோக் எஞ்சின்) என்னுள்ளே இருப்பதும் இம்மாதிரி யந்திரம்தான். நான் இயங்குவதற்கான சக்தியை எதிலிருந்து பெருகிறேன், தெரியுமா? பெட்ரோல் என்ற எரிபொருளும் காற்றும் கலந்த கலவை எரிவதினால் ஏற்படும் சக்திதான் என்னை இயக்குகிறது. இந்தக் கலவை சிலிண்டரினுள் எரிகிறது. அதில் ஒரு பிஸ்டன் உள்ளது. இந்தப் பிஸ்டனை அந்தச் சக்தி மேலும் கீழும் இயங்கச் செய்கிறது. பிஸ்டனோடு ஓர் இணைப்பு க்ராங்க் ஷாஃப்டு — இருக்கும். பிஸ்டனின் இயக்கம் இந்த இணைப்பையும் இயக்கிச் சக்கரங்களைச் சுற்றச் செய்கிறது'' என்றது ஆட்டோ. இதைச் சொல்லிவிட்டு ரமணியையும் உஷாவையும் உற்றுப் பார்த்தது. அவர்களின் குழப்பத்தை முகம் காட்டவே ''ஒன்றும் புரியவில்லை, இல்லையா? சரி. சற்று விளக்கமாகச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும்'' என்று தொடர்ந்து சொல்லியது ஆட்டோ.


''நீங்கள் உயிர் வாழ மூச்சு விடுகிறீர்கள் இல்லையா? சுவாசிக்கும்போது நீங்கள் உள்ளுக்கு இழுக்கும் காற்று நுரையீரலுக்குள் போய் என்ன செய்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஒரு வகையில் என் இயந்திர இயக்கமும் நீங்கள் சுவாசிப்பது போலத்தான். கம்பஸ்சன் என்றால் எரிவது என்று சொன்னேன் இல்லையா? என் உடலுக்குள்ளே (எஞ்சினுள்) பெட்ரோல் ஆவியும் காற்றும் எரிக்கப்படும்போது வெடிப்பு ஏற்படுகிறது. இதைச் செய்வது மின்சாரப் பொறிகள். வெடிப்பு நிகழும்போது அங்குள்ள வாயுக் கலவை மிக மிகச் சூடாகின்றது. இதனால் அவ்வாயுக்கள் விரிவடைந்து அதிக இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள நேருகிறது. இதை நான் உங்களுக்கு விளக்குவதற்குத்தான் இத்தனை நேரமாகிறதே தவிர, என்னுள் அந்தக் காரியம் வெகு வேகமாக நிகழுகிறது. அப்படி வாயுக்கள் துரிதமாக விரிவதினால் பிஸ்டனின் இயக்கமும் துரிதமாக நடக்கிறது. அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சக்கரங்களும் சுழலுகின்றன.

சிலிண்டரின் மேல் பாகத்துக்கு சிலிண்டர் ஹெட் (தலைப் பாகம்) என்று பெயர். சிலிண்டரின் தலைப் பாகத்தில் இரண்டு குழாய்கள் (டியூப்ஸ்) இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று எஞ்சினின் கார்பரேட்டரிலிருந்து வரும் குழாய்.

''கார்பரேட்டர் என்றால் என்ன?''- கேட்டது உஷா.

''அள்வான பெட்ரோல் ஆவியும் காற்றும் கலக்கப்படும் இடம்தான் இந்தக் கார்ப்பரேட்டர். பெட்ரோல் எண்ணெயைச் சிறு அணுக்களாக மாற்றிப் பதினைந்து பங்கு காற்றுடன் ஒரு பங்கு பெட்ரோலைக் கலந்து அனுப்புகிறது கார்பரேட்டர். இங்கிருந்துதான் சிலிண்டருக்குள் எரிக்கப்பட்டு வெடிக்கும் 'பெட்ரோல் வேஃபர்' வருகிறது. இதைக் கொண்டுவரும் குழாய்க்கு 'இன்டேக் டியூப்' என்று பெயர். மற்றொரு குழாய், எரிக்கப்பட்டபின் ஏற்படும் வாயுக்களை வெளியேற்றுகிறது. இது ஆட்டோவின் எக்ஸாஸ்ட்

(எஞ்சினின் நன்கு இயக்க நிலையை விளக்கும் படம்)



குழாயோடு இணைக்கப்பட்டுள்ளது. எனக்குக் கீழே பின்பக்கத்தில் ஒரு குழாய் புகைகளைக் கக்கிக் கொண்டிருக்கிறதே அதுதான் எக்ஸாஸ்ட் பைப்.

''சிலிண்டர் தலைக்கு மேலே உள்ள இவ்விரு குழாய்களும் வால்வுகளால் திறந்து மூடிக் கொள்ளக் கூடியவை. கம்பஸ்சன் அறையின் கதவுகளாக இவ்விரு வால்வுகளும் இயங்குகின்றன. உங்கள் இதயத்தினுள்ளே இரத்தம் புகுந்து வெளியேறும் செயலை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். என் சிலிண்டரின் வேலையும் சுலபமாகப் புரியும். சில வேளைகளில் இவ்விரு வால்வுகளில் ஒன்று மூடி இருக்கும். மற்றொன்று திறந்திருக்கும். எரிப்பும் வெடிப்பும் ஏற்படும் (கம்பஸ்சன் சேம்பரில்) போது இவ்விரு வால்வுகளும் மூடியே இருக்கும்.

சிலிண்டரின் அடிப் பாகத்தில் பிஸ்டன் இருக்கிறது. எஞ்சின் வேலை செய்யும்போது இந்தப் பிஸ்டன் மேலும் கீழும் இயங்கும். எரி வாயுக்களில் வெடிப்பு ஏற்படும் ஒவ்வொரு முறையும் இந்தப் பிஸ்டன் மேலும் கீழுமாக நான்கு முறை இயங்குகிறது. இதனால்தான் இத்தகைய எங்கள் யந்திரத்துக்கு நான்கு இயக்க நிலை எஞ்சின் என்று பெயர். இந்நான்கு நிலை இயக்கங்களை ஒவ்வொன்றாக விளக்கினால்தான் உங்களுக்குப் புரியும். முன் பக்கத்திலுள்ள முதல் படத்தைப் பார். சிலிண்டரில் உள்ள பிஸ்டன் கீழே இழுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சிலிண்டர் கீழே போகும் போது 'இன்டேக் வால்வ்' திறந்து கொள்ள கார்பரேட்டரிலிருந்து பெட்ரோல் ஆவியும் காற்றும் கலந்த கலவை உள்ளே உறிஞ்சி இழுத்துக் கொள்ளப்படுகிறது.' இந்தக் கிரியையின் போது எக்ஸாஸ்ட் வால்வு மூடி இருக்கும். இதற்கு இண்டக்ஷன் இன்டேக் ஸ்ட்ரோக் என்று பெயர். உள்ளே வந்து நிரம்பி இருக்கும் கலவையில் பெட்ரோல் எரிபொருளின் நுண்ணிய அணுக்கள் புகையாகக் கலந்திருக்கும். சிலிண்டரில் நிரம்பியுள்ள இந்த வாயு எரிக்கப்படுமுன் அது அழுத்தப்பட வேண்டும். அதாவது இப்போது அது நிறைந்துள்ள இடத்தை விடக் குறைவான இடத்தில் அதை அழுத்தி அமுக்கி அடைக்க வேண்டும். இதை எப்படிச் செய்வது ?

இரண்டாவது படத்தைப் பாருங்கள். கீழே போன சிலிண்டரை மேலே ஏற்றினால் எரி வாயு நிரம்பியுள்ள இடம் குறையும் இல்லையா ? அப்போது வாயுக்கள் அழுத்தி அடைக்கப்படும். இப்படிச் சிலிண்டரை மேலே தள்ளுவதற்கு அத்துடன் இணைந்துள்ள 'க்ராங்க்' உதவுகிறது. இந்த நிலையில் மேலே உள்ள இரு வால்வுகளும் (இன்லெட், எக்ஸாஸ்ட்) மூடி இருக்கும். வால்வுகளால் சிலிண்டரின் வாசல்கள் அடைக்கப்பட்ட நிலையில் பிஸ்டனின் மேல் நோக்குப் பயணத்தினால் உள்ளிருக்கும் வாயுக்கள் அது முன்பு ஆக்கிரமித்திருந்த இடத்தைப்போல் எட்டு மடங்கு குறைவான இடத்தில் அமுக்கப்படுகின்றன. இந்த நிலைக்கு கம்ப்ரஷன் ஸ்ட்ரோக் என்று பெயர்.

மூன்றாவது நிலை. அழுத்தப்பட்ட வாயுக்கள் எரிக்கப்பட வேண்டும். அது எப்படி ? இதை மின்பொறிகள் செய்கின்றன. சிலிண்டரின் உச்சியில் ஸ்பார்க் ப்ளக் என்றொரு சாதனம் உள்ளது. இதிலிருந்து மின்சாரம் உற்பத்தியாகிச் சிலிண்டரினுள் அழுத்தப்பட்டிருக்கும் எரிவாயுவினுள் பாய்கிறது. பெட்ரோலின் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே. கொஞ்சம் உஷ்ணப்பட்டாலும் குபீரென்று தீப்பிடித்துக் கொள்ளக்கூடிய இல்லையா ? அப்படி இருக்க இதில் மின் பொறிகள் பாய்ந்தால் என்ன ஆகும்?

''குபீரென்று பற்றிக் கொள்ளும்'' என்றான் ரமணி.

''ஆமாம். பெட்ரோல் வாயு எரியும் போது ஏராளமான உஷ்ணம் ஏற்படும் இல்லையா? உஷ்ணத்தினால் வாயுக்களின் நிலை என்ன ஆகும்?''

''விரிவடையும். இது தெரியாதாக்கும்'' என்றாள் உஷா.

''அதுவேதான். பெட்ரோலும் காற்றும் எரியும்போது ஏராளமான உஷ்ணமும் பலவித வாயுக்களும் உண்டாகின்றன. அழுத்தம் அதிகமாகிறது. அப்போது இவ் வாயுக்கள் சிலிண்டரின் சுவர்களையும் பிஸ்டனின்மேல் பக்கத்தையும் தாக்குகின்றன. இரு வால்வுகளும் மூடியுள்ள நிலையில், வாயுக்களின் தாக்குதலால் நகரக் கூடியது பிஸ்டன் ஒன்றுதான். ஆகவே பிஸ்டன் கீழ் நோக்கி இறங்குகிறது.. அத்துடன் இணைக்கப்பட்டுள்ள 'க்ராங்க்' ஷாப்ட் சுழல இக்காரியம் நடைபெறுகிறது. இதற்கு எக்ஸ்பான்ஷன் ஸ்ட்ரோக் என்று பெயர். நான்கு நிலைகளில் ஒரு நிலையானாலும் இந்த ஸ்ட்ரோக்தான் மிக முக்கியமானது. பிஸ்டனைத் தொடர்ந்து இயங்கச் செய்வது இந்த நிலைதான். எக்ஸ்பான்ஷன் ஸ்ட்ரோக் தான் என் யந்திரத்துக்குச் சக்தியைக் கொடுக்கிறது. ஆகவே, இதை பவர் ஸ்ட்ரோக் என்றும் கூறுவார்கள்.

இனி நான்காவது நிலையைப் பார்ப்போம். எரிக்கப்பட்ட வாயுக்கள்

சிலிண்டரில் நிரம்பி யிருக்கின்றன இல்லையா? இவைகளை வெளியேற்றினால் தானே புதிய எரிபொருள் உள்ளே வர முடியும்? உஷ்ணத்தினால் விரிவடைந்த வாயுக்கள் சிலிண்டரை உந்திக் கீழே தள்ளியதில்லையா? இப்போது சிலிண்டர் அந்த எரிந்த வாயுக்களை எதிர்த்து அழுத்தி மேலே தள்ளி மேல் நோக்கிச் செல்ல வேண்டும். இந்தச் சமயத்தில் எக்ஸாஸ்ட் வால்வ் திறந்து கொள்ளும். எரிந்த வாயுக்கள் எக்ஸாஸ்ட் குழாய் வழியே வெளியேறுகிறது. சிலிண்டரின் உச்சிக்குப் பிஸ்டன் போனதும் இன்லெட், எக்ஸாஸ்ட் ஆகிய இரு வால்வுகளும் மூடிக் கொள்ள மறுபடியும் இந்தச் சுழற்சி தொடருகிறது. படங்களில் பிஸ்டனோடு இணைந்துள்ள 'க்ராங்க்' ஷாஃப்ட் எப்படிச் சுழலுகிறது என்பதைக் கவனி.

''சைக்கிளில் இந்த க்ராங்க் ஷாப்ட் இயக்கம், நான் பெடல் பண்ணுவதினால் ஏற்படுகிறது இல்லையா?'' என்று கேட்டான் ரமணி.

''ஆமாம். சைக்கிளின் க்ராங்க் ஷாஃப்ட் பின் சக்கரத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது. இதே முறைதான் மோட்டார் — இல்லை — ஆட்டோவிலும். பிஸ்டனோடு இணைக்கப்பட்டுள்ள க்ராங்க் ஷாஃப்ட் கார்ச் சக்கரங்களை இயக்கி ஓட வைக்கிறது.''

'' ஒரு காரில் எத்தனை சிலிண்டர்கள் இருக்கும்?'' என்று கேட்டான் ரமணி.

''ஒரு சிலிண்டர்தான்'' என்றாள் உஷா.

''இல்லை. நான்குக்கு மேலே இருக்கலாம். குறையக் கூடாது. ஒரு சிலிண்டரானால் காரின் சக்கரங்களைச் சுழற்றித் திருப்புவது கடினம். ஆறு சிலிண்டர்கள் உள்ள எஞ்சினும் உண்டு. ஒவ்வொரு சிலிண்டரின் பிஸ்டனும் ஒரே க்ராங்க் ஷாஃப்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிலிண்டரிலும் மிகக் குறைந்த இடைவெளியில் மாற்றி மாற்றி பவர் ஸ்ட்ரோக் ஏற்படும். பல சிலிண்டர்கள் இருப்பதினால் நான் வசதியாக இலகுவாக, சுகமாக ஓடமுடியும்.''

'' உங்கள் உடலுக்குள் ஏற்படும் எரிப்புச் சக்தியினால் ஏற்படும் ஏராளமான உஷ்ணத்தை நீங்கள் எப்படித் தாங்கிக் கொள்ளுகிறீர்கள் ?'' என்று கேட்டான் ரமணி.

''சரியான கேள்விதான். கார் எஞ்சின் சூடாகிவிட்டது என்று உன் அப்பா சொல்வதைக் கேட்டிருப்பாயே? தவிர நீ பஸ்ஸில் போகும்போது டிரைவரின் ஆசனத்துக்கு அருகில் உட்கார்ந்து

போயிருக்கிறாயா ?'' என்று கேட்டது ஆட்டோ.

''அப்பாடி ! அனலாகத் தகிக்கும். இடமில்லாவிட்டால் நின்று கொண்டு போனாலும் போவேனே தவிர நான் அந்த ஆசனத்தில் உட்காரவே மாட்டேன்'' என்றாள் உஷா.

''இப்படி என் உடம்பு சூடாகிவிடுவதைத் தணிக்கத்தான் சிலிண்டரைச் சுற்றி நீர் நிறைந்த ஒரு சட்டையைப் போட்டிருக்கிறார்கள். இதிலுள்ள தண்ணீர் என் உடல் உஷ்ணத்தைக் கிரகித்துக் கொள்ளுகிறது. இதனால் வெந்நீராகும் தண்ணீரை அடிக்கடி குளிர்ந்த நீர் ஊற்றிக் குளிரப் பண்ணுவார்கள்.''

''ஆட்டோ சார் இன்னும் ஒரே ஒரு சந்தேகம். டீஸல் எஞ்சினுக்கும் பெட்ரோல் எஞ்சினுக்கும் என்ன வித்தியாசம் ?''

'' அது தனிக் கதை. விரிவாகச் சொல்ல வேண்டும். அதுவும் இண்டர்னல் கம்பஸ்சன் யந்திரம்தான். **ருடால்ஃப் டீஸல்** என்ற ஜெர்மானியர் இம்முறையைக் கண்டுபிடித்தார். பெரிய லாரிகள், கப்பல்கள், ரயில்கள் ஆகியவைகளில் டீஸல் இயந்திரங்களைத்தான் அமைத்து ஓட்டுகிறார்கள். இதில் பெட்ரோலுக்குப் பதில் எரியும் எண்ணெய் பயன்படுகிறது. இது சிக்கனமானது. இதில் கார்பரேட்டர் கிடையாது. ஸ்பார்க் பிளக் கிடையாது. இதற்குப் பதில் உஷ்ணப்படுத்தப்பட்டு அழுத்தி அடைக்கப்பட்ட காற்றில் டீஸல் எண்ணெயைச் செலுத்தும் ஒரு நுண்ணிய சாதனம் இருக்கும். டீஸல் யந்திரங்கள் ரொம்ப எளிமையானவை. ஆனால் கனமானவை. அதிக வேகம் காண முடியாது. ஆனால் சிக்கனமானவை. என் கதையை இவ்வளவு கவனமாகக் கேட்டீர்களே. உங்களைச் சில கேள்விகள் கேட்கிறேன். சொல்வீர்களா ?'' என்றது ஆட்டோ.

''கேளுங்கள்'' என்றார்கள் கோரஸாக ரமணியும் உஷாவும்.

'' ஆட்டோ கார் யந்திரத்தினுள் எரிக்கப்படுவது எது?''

''பெட்ரோல் எண்ணெயின் ஆவியும் காற்றும்.'' — ரமணி.

'' நான்கு இயக்க நிலைகள் என்னென்ன ?''

''இன்டேக், கம்ப்ரஷன், எக்ஸ்பான்ஷன் (பவர்) எக்ஸாஸ்ட் ஆகியவை.''— உஷா.

''எந்த நிலையில் சக்தி உற்பத்தியாகிறது ?''


''எக்ஸ்பான்ஷன் (பவர்) ஸ்ட்ரோக் நிலையில்.'' — ரமணி.

'' எரிபொருள் எப்படி எரிக்கப்படுகின்றன?''

''ஸ்பார்க் பிளக்கிலிருந்து வெளிப்படும் மின்பொறியின் தாக்குதலால்.''— உஷா.

''பலே.... பலே... நான் கூறியவைகளைக் கவனமாகக் கேட்டுப் புரிந்து கொண்டிருக்கிறீர்களே. ரைட்டோ. அதோ அப்பா வருகிறார். எனக்கு விடை கொடுங்கள்'' என்று மௌனமாகியது மீசைக்கார ஆட்டோ.





அடுத்த இதழில் யார்?



செக்கோ -
ஸ்லோவேகியா

'கிட்டுவும் பட்டுவும் மேல் வகுப்புக்குப் போய்ப் புதுப் புத்தகங்கள் வாங்கி விட்டார்கள். அவற்றின் புது மணத்தை ஆழ்ந்து சுவாசித்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது பரமேசுவரன் தாத்தா அங்கு வந்தார். ''புதுப் புத்தகத்தின் வாசனையில் மூழ்கி இருக்கிறுப் போலிருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார்.

''அது சரி தாத்தா! உங்களை ஒரு வாரமாகக் காணவில்லையே! எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டான் கிட்டு.

''தேச சஞ்சாரம் போயிருந்தேன்'' என்றுர் பரமேசுவரன்.

''எந்தத் தேசத்துக்கோ?'' — இது பட்டு.

''நீங்கள்தான் பூகோளத்தில் புலிகளாயிற்றே! எங்கே சொல்லுங்கள், பார்க்கலாம் — பொஹீமியா, ஸ்லோவேகியா, மொரேவியா, சிலேஷியா, சப்கார்பதியன் ருதீனியா இதெல்லாம் எங்கே உள்ள நாடுகள்?'' என்று கேட்டார் பரமேசுவரன்.

கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் சங்கடமாகிவிட்டது. படித்த பெயர்கள் போலவும் இருக்கின்றன. ஆனல் எங்கே உள்ள தேசங்கள் இவை என்று உடனே சொல்ல முடியவில்லை. தாத்தாவுக்கு அவர்கள் தோல்வியில் ஒரு மகிழ்ச்சி. ''பூகோளப் புலிகளா, தோற்றுப் போனீர்கள் இல்லையா? வேணும் கட்டைக்கு வேணும்! இதற்குத் தண்டனை என்ன தெரியுமா? என் மந்திரமைக்கு இன்று வேலை கிடையாது. உங்களை எங்கும் அழைத்துப் போகப் போவதில்லை'' என்றுர்.

''ஆனல் நீங்கள் போய் வந்த அந்த இடங்களைப் பற்றிச் சொல்லலாமில்லையா?'' என்று கேட்டார்கள்கிட்டுவும் பட்டுவும் அழாக்குறையாக.

''ஓ! தாராளமாக. செக்கோஸ்லோவேகியா என்ற நாட்டைப் பற்றித் தெரியுமில்லையா உங்களுக்கு?'' என்று கேட்டார் தாத்தா.

''ஆமாம். ஐரோப்பாவில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட் நாடு'' என்றுள் பட்டு.

''இந்தச் 'செக்' நாடுதான் ஒருகாலத்தில் பொஹீமியா, ஸ்லோவேகியா, மொரேவியா, சிலேஷியா, ருதீனியா என்ற பெயர்களுடன் விளங்கி வந்தது. —இவை செக்கோஸ்லோவேகியாவாக உருவானது முதல் மகா யுத்தத்துக்குப் பிறகுதான். அதாவது 1918ம் ஆண்டில். இந்த நாடு ஐரோப்பாவின் நடு மையத்தில் இருப்பதைத் தேசப்படத்தில் பார்த்தால் புரிந்து கொள்ளுவீர்கள். இதன் அண்டை நாடுகள் என்னென்ன என்று தெரியுமா?''

''ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, போலந்து, ரஷ்யா ஆகியவை இதன் எல்லை நாடுகள்'' என்றுன் கிட்டு.

''யா, யா, யா, என்று நாலைந்து பெயர்களைச் சொன்னேனில்லையா? இருந்தாலும் பூர்விக செக் நாட்டைப் பொதுவாகப் பொஹீமியா என்றுதான் சொல்லுவது வழக்கம். ஒரு சமயம் இந்தப் பொஹீமியா தேசம் தன் சுதந்திரத்தை இழந்து ஆஸ்திரியாவிடம் அடிமைப்பட்டது. ஆஸ்திரியர்களின் மொழி ஜெர்மன். அடிமைப்படுத்தப்பட்ட பொஹீமியர்களை ஆஸ்திரிய மன்னர் ஜெர்மன் மொழியில்தான் பேச, எழுதவேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். அவர்களுடைய தாய் மொழியோ 'செக்'. சர்வகலாசாலைகளில் ஜெர்மனியே போதன மொழியாக்கப்பட்டது. எல்லாப் புத்தகங்களும் ஜெர்மன் மொழியிலேயே அச்சிடப்பட்டன. ஜெர்மன் மொழி தெரிந்தவர்களுக்குத்தான் அரசாங்கத்தில் வேலை. இப்படி அன்னியர்களிடம் அவதிப்பட்ட 'செக்' மக்களுக்கு முதல் மகா யுத்தத்துக்குப் பிறகு விடிவு ஏற்பட்டது. சுதந்திரம் அடைந்தார்கள்.

தேசப் படத்தில் செக்கோஸ்லோவேகியா என்ற பெயருடன் புதிய நாடும் தோன்றியது. ஆனால் இந்தப் புதிய நாட்டினால்தான் இரண்டாம் உலகப் போரும் ஆரம்பமாயிற்று'' என்றார் தாத்தா.

'' அது எப்படி.....?'' என்றனர் கிட்டுவும் பட்டுவும்

''புதிய பெயரில் புதிய அமைப்பில் புதிய தேசம் தோன்றினாலும் அங்கு ஏராளமான ஜெர்மானியர்கள் வசித்து வந்தார்கள். 'செக்' மக்களைவிட அதிகமான ஜெர்மானியர் இங்கு வாழ்ந்ததால் ஹிட்லர் மிகச் சுலபமாக இதைத் தமதாக்கிக் கொண்டார். மறுபடியும் இது தனது சுதந்திரத்தை இழந்தது. 1939ல் ஹிட்லரால் கபளீகரம் செய்யப்பட்ட இதை இரண்டாம் உலகப் போரின் முடிவில், 1945ல், ரஷ்யா விடுவித்தது. யுத்த காலத்தில் மக்களில் அநேகர் கம்யூனிஸ்டுகளானார்கள். 1948ம் ஆண்டு க்ளமெண்ட் காட்வால்டு என்பவரின் தலைமையில் கம்யூனிஸ்டுகள் அரசின் ஆதிக்கத்தைக் கைப்பற்றினார்கள். மூன்று மிலியன் ஜெர்மானியர்களை நாடு கடத்தி அவர்களின் உடைமைகளை 'செக்' கம்யூனிஸ்ட் ஆட்சி தனதாக்கிக் கொண்டது. நான் அங்குதான் விசேஷ அழைப்பின் பேரில் போயிருந்தேன்'' என்றார் பரமேசுவரன்.

'' விசேஷ அழைப்பா ? யார், உங்களை அழைத்தது?'' என்றான் கிட்டு.

''ஏன், உங்களுக்குத்தான் பேனா நண்பர்கள் உலக நாடு முழுதும் இருக்க வேண்டுமோ ? என்னை அழைப்பவர்களும் இருக்கிறார்கள் அப்பா! 'செக்' மக்கள் சங்கீத ரசிகர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய இசையை விரும்பிப் பாடுபவர்கள். எனக்குத்தான் இசை என்றால் ஒரு தனி ஈடுபாடாயிற்றே. ஓர் இசை விழாவுக்குப் போயிருந்தேன். அப்படியே அந்த நாட்டின் இயற்கைக் காட்சிகளையும் பார்த்து விட்டு வந்தேன்'' என்றார் தாத்தா.

''ரொம்பஅழகான நாடா.. 'செக்?,''

'' முழுக்க முழுக்க மலைப் பிரதேசம் தான் இந்த நாட்டில். நீண்ட குறுகலான ஒரு தேசம். இதன் மேற்குப் பகுதி ஜெர்மனிக்குள் புகுந்து செல்லும். கிழக்குப் பகுதி ரஷ்யாவைத் தொட்டுக் கொண்டுமிருக்கும்.

''இதன் மலைகள் ஆல்ப்ஸ் மலைகளைப் போல் உயரமானவையல்ல. இதன் உச்சிகளில் பனி மூடி இருக்காது. ஸ்விஸ் மலைகளைப் போலப் பனி ஆறுகள் உருகி ஓடி வரவில்லை. இம்மலைகளின் உச்சிகள் மொட்டையானவை. பைன், ஃபிர் மரக் காடுகளால் மூடப் பட்டவை. இந்தக் காடுகளில் காட்டுப் பன்றிகள் ஏராளம். அதை வேட்டையாடுவது செக் மக்களின் விசேஷத் திறமை.

''மலை நாடானதால் தாவிப் பாய்ந்து செல்லும் ஓடைகளும், தகதகக்கும் ஆழமான ஏரிகளும், பள்ளத்தாக்குகளும், பசும்புல் வெளிகளும் ஏராளமாக இருக்கின்றன. இந்த நாட்டைப் பொதுவாக இரு பாகங்களாகப் பிரித்துக் கூறுகிறார்கள். மேற்கே உள்ளது செக் நாடு, கிழக்கே உள்ளது ஸ்லோவேகியா. மலைப் பிரதேசத்தில் மிதமான மழை பெறும் கால நிலை. ஆனால் அடிவாரம் வறட்சி மிக்கதாக இருக்கும். மாரிக் காலத்தில் ரொம்ப ரொம்பக் குளிராகவும் அதே போலக் கோடையில் அதி வெப்பமாகவும் இருக்கும்.''

'' புதிய நாடு தோன்றுவதற்குமுன் ஜெர்மானியர்கள் அதிகம் இருந்ததாகக் கூறினீர்களே தாத்தா, இப்போது இங்கு எந்த இனத்தவர்கள் அதிகம்?'' என்று கேட்டான் கிட்டு.



''பல இன மக்களும் வாழ்ந்தாலும் அதிகம் 'செக்' மக்கள்தான். அறுபத்தேழு சதவிகிதம் ஸ்லோவேகியர்கள். இருபத்தாறு சதவிகிதம் மற்றவர்களான மாக்யார்ஸ், உக்ரேனியர்கள், ருதினியர்கள், போலிஷ் மக்கள். ஜெர்மானியர் ஏழு சதவிகிதம். மொத்த ஜனத்தொகை பதின் மூன்று மிலியன். நாட்டின் பரப்பளவு 49,354 சதுர மைல்கள்.

''செக் பகுதி பொஹீமியா, — மொரோவியா, சைலீஷியா என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொது விடுமுறைத் தினங்களில் செக் மக்கள் கண் கவர் ஆடைகள் அணிந்து தெருக்களில் நடனமாடியபடி குதூகலிப்பார்கள். ஸ்லோவேகிய மாதர்கள் எம்பிராய்டரி செய்யப்பட்ட குல்லாய்களையோ, அல்லது வெள்ளைத் துணியாலான தலையணிகளையோ அணிந்து கவர்ச்சிகரமாக விளங்குவார்கள். செக் மக்கள் அநேகமாகக் கதோலிக்கர்களாகத்தானிருக்கிறார்கள். புராடஸ்டெண்டுகளும் யூதர்களும் கொஞ்சம்.

''மலை நாடானாலும் இங்கு 8,177 மைல் நீளத்துக்கு ரயில்வே லைன் உள்ளது. நிலக்கரியும் மரங்களும் ரயில் மூலம்தான் கொண்டு செல்லப்படுகின்றன. 43,000 மைல்களுக்குச் சாலைகள் உள்ளன. ஏராளமான நதிகள் இருந்தாலும் அதிகமாகப் போக்குவரத்துக்குப் பயன்படுவதில்லை.''

''அடர்ந்த காடுகளைக் கொண்டது செக்கோஸ்லோவேகியா என்று படித்திருக்கிறோம் தாத்தா. அங்குள்ள காட்டில் என்னென்ன மிருகங்கள் வசிக்கின்றன?'' என்று கேட்டான் கிட்டு.

''அற்புதமான கானகப் பகுதி. ஓநாய்கள், பழுப்பு நிறக் கரடிகள், காட்டுப் பன்றிகள், காட்டுப் பூனைகள் ஆகிய பயங்கரப் பிராணிகளோடு சாதுவான 'ரோ' என்ற மான்களும் செமாய்ஸ் என்ற மலை ஆடுகளும் உள்ளன. கண் கவர் வண்ணங்களை உடைய பறவைகளும் உண்டு. வெள்ளைத் தலை ஆந்தை, வெள்ளை வால் கழுகு, பொன்னிறக் கழுகு ஆகியவை முக்கியம். 'செக்' நாட்டின் தலைநகர் எது தெரியுமா?''

''ப்ரேக் தானே?'' என்றாள் பட்டு.

''ஆமாம். பொஹீமியாவில் உள்ள மலைகள் தெற்கிலிருந்து வடக்காக நிதானமாகச் சரிந்து அடிவாரத்தில் ஒரு பரந்த சமவெளியை (பேசின்) ஏற்படுத்தியுள்ளது. இதன் நடுப்பகுதியில் தான் தலைநகர் ப்ரேக் உள்ளது. பொஹீமியாவின் தென் மேற்கு மலைகளின் சராசரி உயரம் 3300 அடிகள். வடமேற்கிலுள்ள 'ஓர்' மலைகளின் உயரம் 3500 அடிகள். வடகிழக்கில் ராட்சத மலைத் தொடர்கள் உள்ளன. கார்ப்பதியன் மலைகள், மேற்கு, கிழக்கு டாட்ராமலைகள் பிரபலமானவை.''

''மலைகளாகவே சொல்கிறீர்களே, தாத்தா! நகரங்களே கிடையாதா?'' என்று கேட்டாள் பட்டு.

''ஏன் இல்லாமல், 20,000 மக்கள் ஜனத்தொகை கொண்ட நகரம் ஐம்பதுக்கு மேல் உள்ளன. 50,000க்கு மேல் ஜனத்தொகையுள்ள நகரங்கள் பத்துக்கு மேல் இருக்கும். ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரங்கள் ஐந்து. இவை போதாதா? அழகான கட்டடங்களும், பாலங்களும், மாதா கோயில்களும் உள்ள நாடு செக்கோஸ்லோவேகியா. ஆரோக்கியவாசஸ்தலங்களுக்குப் பெயர் போனது 'செக்'.''

''எங்களை அங்கு அழைத்துப் போகாமல் நீங்கள் மட்டும் போய் இத்தனை அழகையும் ரசித்து வந்திருக்கிறீர்களே!'' என்று பொய்க் கோபத்துடன் கறுவிய கிட்டு, ''அந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள் தாத்தா!'' என்றான்.

''காடுகள் நிறைந்த நாடு மட்டுமல்ல. கழனிகளும் நிறைந்த நாடு தான் செக். மலைப் பகுதியில் கிழக்கே ஆடு மேய்த்தல் முக்கிய தொழில். சாகுபடிக்கு ஏற்றதல்ல. மேற்குச் சமவெளிப் பகுதியில், கால்நடை வளர்த்தலோடு பிளாக்ஸ், சர்க்கரைக்குப் பயன்படும் பீட், ஹாப்ஸ், கோதுமை, ஆப்பிள்கள், பேரிக்காய்கள் ஆகியவைகளும் பயிரிடப்படுகின்றன. ஓட்ஸ், ரை ஆகியவையும் உருளைக் கிழங்கும் சாகுபடியாகின்றன. மேற்குப் பகுதிக் காடுகளிலிருந்து ஏராளமான மரங்களை வெட்டி அனுப்புகிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தை இம்மரங்கள் உயர்த்துகின்றன. செக்கோஸ்லோவேகியா — தொழில் வளப்பம் மிக்க நாடும்கூட. ஏராளமான தாதுப்பொருள்கள் கிடைக்கின்றன. நிலக்கரி, இரும்பு, ஈயம், வெள்ளி ஆகியவை முக்கியம். சுரங்கத் தொழிலில் ஏராளமான தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். மண் பாண்டங்களுக்கும் சங்கீதக் கருவிகளுக்கும் புகழ்பெற்றது செக் நாடு. இங்கு தயாராகும் (Cut glass) பளிங்குக் கண்ணாடி கலைப் பொருள்கள் உலகப் பிரசித்தமானவை. உலகிலேயே காலணிகள் தயாரிக்கும் மிகப் பெரிய தொழிற்சாலை செக் நாட்டில்தான் இருக்கிறது.''

''இத்தனை புகழ்பெற்ற 'செக்' நாட்டுக்கு எங்களைக் கூட்டிப் போகாமல் ஏமாற்றி விட்டீர்களே, தாத்தா!'' என்றாள் மறுபடியும் பட்டு.

விகே.

தெரியுமா?

642. பிரெஞ்சுப் புரட்சியின்போது கொலை செய்யப்பட்ட பிரெஞ்சு மன்னர் யார்?

643. இங்கிலாந்தில் ஏற்பட்ட குடியானவர்களின் புரட்சியின்போது நாட்டை ஆண்ட மன்னர் யார்?

644. லூடைன் பெல் (Lutine Bell) என்றால் என்ன என்று தெரியுமா?

645. டெஸிடுயஸ் என்றால் என்ன?

646. ஓபஸ் (Opus) என்றால் என்ன?

647. ஜேம்ஸ் புச்சனன் (James Buchanan) என்பவர் யார்?

648. பதினாறும் நூற்றாண்டில் ஒரு ஜெர்மன் பாதிரியார் மத ஸ்தாபனங்களை மிகக் கடுமையாக எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அவர் யார் தெரியுமா?

649. டார்ஜான் படங்கள் பார்த்திருப்பீர்களே? அந்தப் பாத்திரத்தைப் படைத்துக் கதைகள் எழுதியவர் யார் தெரியுமா?

650. எந்தத் தீவுக் கூட்டத்தில் மணிலா உள்ளது?

651. (a) ஐ. நா. தலைமையகம், (b) கடல் கன்னியின் சிலை, (c) அக்ரோபோலிஸ் — இவை எங்கே உள்ளன?

652. கேப் ஹார்ன் (Cape Horn) எங்குள்ளது என்று சொல்ல முடியுமா?

653. கீழ்க்கண்ட வார்த்தைகள் எந்தெந்த விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படுகின்றன தெரியுமா? (a) டிராப் கிக் (b) புட் (c) ஃபைன் லெக் (d) ஹாஃப் நெல்சன்.

654. பேரியம் உப்பைக் கொளுத்தினால் கிடைக்கும் சுடரின் நிறம் என்ன?

655. கண்ணாடி உருவாக்குவதற்குத் தேவையான முக்கிய பொருட்கள் என்னென்ன?

656. மனித உடலில் எந்த இடத்தில் மஞ்சள் பகுதி (Yellow Spot) உள்ளது?

657. பைப்ரா டெக்னிக் (Pyrotechnics) என்றால் என்ன?

658. இங்கிலாந்தில் உள்ள ஒரு மாகாணம் காலணிகள் செய்வதற்குப் புகழ் பெற்றது. அந்த மாகாணத்தின் பெயர்?

659. நயகாரா நீர் வீழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வட அமெரிக்காவில் கானடா, ஐக்கிய அமெரிக்க நாட்டின் எல்லையில் உள்ள பிரபலமான நீர்வீழ்ச்சி. இதை ஒருவர் இழுத்துக் கட்டிய கயிற்றின்மீது நடந்தபடி கடந்தார். அவர் யார்?

660. பஃபின், கல்லிமோட், ஸ்டாம் பெட்ரல் இவைகளெல்லாம் என்ன தெரியுமா?

661. ரைபில் பறவையை (Wrybill Bird) எங்கு காணலாம்?

662. ஃபியூஷன் (Fusion) என்றால் என்ன?

663. ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த தண்ணீர் — அதே பாத்திரத்து நீர் உறைந்து பனிக்கட்டியாக்கப்படுகிறது. இவ்விரண்டில் அதிக கனபரிமாணமுடையது எது? நீரா, பனிக்கட்டியா?

664. கூக்கபுர்ரா (Kookaburra) என்பது பறவையா, மிருகமா, நீர்வாழ் இனமா, மரமலா?

665. ஹாலோபைட் (Halophyte) தாவரங்களின் முக்கிய குணம் என்ன?

666. ஸெயிண்ட் பீட்டர்ஸ் பர்க், கான்ஸ்டாண்டிநோபிள், கோல்டு கோஸ்ட், பர்ஸ்னியா — இவைகளின் இன்றையப் பெயர் என்ன என்று தெரியுமா?

667. பாடனி விரிகுடா எந்த நாட்டில் இருக்கிறது தெரியுமா?

668. காண்டர்பரி எந்த மாகாணத்தில் உள்ளது?

669. ஸ்காட்லாந்தின் எல்லையை ஒட்டியுள்ள இரண்டு மாகாணங்களின் பெயர் தெரியுமா?

தெரியுமே!

642. பதினாறாம் லூயி. 643. இரண்டாம் ரிச்சர்டு மன்னர். 644. லண்டனில் லாயிட்ஸ் என்னுமிடத்திலுள்ள மணியின் ஒலிக்கு. இது ஒரு தடவை ஒலித்தால் கெட்ட செய்தி. இரு தடவை ஒலித்தால் நல்ல செய்தி. 645. ஒவ்வொரு வருடமும் புதிய இலைகள் வளரும் மரத்துக்கு இப்பெயர். 646. வேலை என்பது பொருள். இசைக் கலைஞர்களுக்குத்தான் இப்பதத்தைப் பயன்படுத்துவர். 647. அமெரிக்க ஜனாதிபதி. 648. மார்ட்டின் லூதர். 649. எட்கார்ரைஸ் பர்ரோஸ் என்பவர். 650. பிலிப்பைன் தீவுகளில். 651. (a) நியூயார்க் (b) கோபன்ஹேகன் (c) ஏதென்ஸ். 652. தென்அமெரிக்காவின் தெற்குக் கோடி முனையில். 653. (a) ரக்பி (b) கால்ஃப் (c) கிரிக்கெட் (d) குஸ்திச் சண்டை. 654. பச்சை. நீலவெளிப் பச்சை மத்தாப்பு இதனால்தான் செய்யப்படுகிறது. 655. மணல், சுண்ணாம்புக் காரம், ஈயம் (லெட்). 656. கண்களிலுள்ள ரெடினாவின் ஒரு பகுதி இந்த மஞ்சள். 657. வெடிகள், வாணங்கள் செய்யும் கலைக்குப் பெயர். 658. நார்த்தாம்டன் ஷயர். 659. பிளாண்டின் என்பவர். 660. இவை எல்லாம் கடற்பறவைகள். 661. நியூஸிலாந்தில். 662. ஒரு பொருளைச் சூடாக்கும்போது அது திட நிலையிலிருந்து திரவ நிலைக்கு மாறுவதற்கு ஃபியூஷன் என்று பெயர். 663. பனிக்கட்டிதான். 664. ஒரு பறவை. 665. இவை உப்பை விரும்பி ஏற்பவை. 666. லெனின்கிராடு, கான்ஸ்டாண்டி நோபிள், கானா, யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதி. 667. ஆஸ்திரேலியாவில். 668. கென்ட் மாகாணத்தில். 669. கம்பர்லாந்தும், நார்த்தம்பர்லாந்தும்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்


ராசுவும் வாசுவும் பாப்பின்ஸ் கொள்ளையை முறியடித்த சாதனை
ஓசையடங்கிய ஓரிரவு ராசு, வாசு இருவருமே ஓய்ந்துறங்கிய வேளை...
வெள்ளி, தங்கம் ஏதும் விரும்பாமலே கள்ளன் அள்ளினான் பாப்பின்ஸ்.
பாலகர் இருவருக்கும் பரிசளித்தார் பெரிசாய் பாப்பின்ஸ் பாக்கெட்டு!
ருசியானவை
அருமையானவை
பிரமாதமானவை
5 பழரசச் சுவை வகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை,
ஆரஞ்சு, சாத்துக்குடி.
ஒவ்வொரு சுருளிலும் 13
மிட்டாய் வில்லைகள்—
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம். மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

A Times of India Publication

